பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2048 | கார்த்திகை 15 | வெள்ளிக்கிழமை 01.12.2017 | கதிர் 26

## நயினாதீவிலும் நேற்று கடல் கொந்தளிப்பு



யாழ்ப்பாணம், டிசெ .01
தற்போது நிலவிவரும் சீரற்ற காலநிலையால் நயினாதீவிலும்
பக்கம் 18

# நீங்கியது தடை!

**நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுக்களை 6 மனுதாரர்களும் நேற்று மீளப் பெற்றனர்**

கொழும்பு, டிசெ.01
உள்ளூராட்சிச் சபைகளின் எல்லை நிர்ணயம் தொடர்பான வர்த்தமானியை நடைமுறைப்படுத்துவதற்குப் பிறப்பித்திருந்த இடைக்காலத் தடையை நேற்று விலக்கிக்கொண்டது
பக்கம் 18

# பெப்ரவரி 10 இல் குட்டித் தேர்தல்

**எஞ்சிய சபைகளுக்காக அறிவிப்பு திங்கள் வரும்**

யாழ்ப்பாணம், டிசெம்பர் 01
சகல உள்ளூராட்சிச் சபைகளுக்கும் பெப்ரவரி 10 ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு டிசெம்பர் 26 ஆம் திகதி வெளியிடப்படும்.
பக்கம் 18

## கத்திகள், கைக்கோடரிகளுடன் ஆவா குழுவின் மூவர் சிக்கினர்

**யாழ். பொலிஸார் தீவிர விசாரணை**



யாழ்ப்பாணம், டிசெ. 01
ஆவா குழுவுடன் இணைந்து வாள்வெட்டு வன்முறைகளில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.
கைதானவர்களிடம் 6
பக்கம் 18

## மஹிந்த தரப்பினரும் நேற்றுக் கட்டுப்பணம்

**சாவகச்சேரியில் போட்டியிட**



யாழ்ப்பாணம், டிசெ. 01
சாவகச்சேரி நகரசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக மஹிந்த ராஜபக்ஷ ஆதரவுக் கட்சியான
பக்கம் 03

# வலி. வடக்கில் 29 ஏக்கர் காணி 30 ஆண்டுகளின் பின் விடுவிப்பு

**ஆலயம், பாடசாலை உள்ளடக்கம்**





யாழ்ப்பாணம், டிசெ. 01
யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு ஒட்டகப்புலத்தில் இராணுவத்தினர் வசமிருந்த 29 ஏக்கர் காணிகள் நேற்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டன.
பக்கம் 18

## மின் தடையால் எட்டு இலட்சம் மக்கள் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 01
நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக எட்டு இலட்சம் மக்கள் மின்சாரம் இன்றி கஷ்டப்படுகின்றனர் என மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்
பக்கம் 03

## சுவிஸில் பதுங்கியுள்ள சன்னா 'இன்ரபோல்' மூலம் கைதாவார்

**யாழ்.பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், டிசெ. 01
சுவிற்சர்லாந்தில் பதுங்கியுள்ள வாள்வெட்டுக் குழுவின் தலைவர்களில் ஒருவரான சன்னா என்பவரைச் சர்வதேசப் பொலிஸாரின் (இன்ரபோல்) உதவியுடன் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-
யாழ். குடாநாட்டிலும்,
பக்கம் 03



# கடும் மழையால் தெற்கில் அவலம்

**7 பேர் சாவு; 5 பேர் மாயம்**
**20 ஆயிரம் பேர் பாதிப்பு**



கொழும்பு, டிசெ. 01
தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் மழையால் 7 பேர் உயிரிழந்துள்ளனர். 5 பேரைக் காணவில்லை. 20 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இவ்வாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று மாலை தெரிவித்துள்ளது.
இடர் முகாமைத்துவ மத்
பக்கம் 18

# சம்பந்தனின் தலையீட்டினால் முடிவுக்கு வந்தது போராட்டம்!

**வடக்கில் சேவை இன்று முதல் வழமைக்கு**



யாழ்ப்பாணம், டிசெ. 01
இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய பிரதான முகாமையாளரான உபாலி கிரிவத்துடுவ உடனடியாக இடமாற்றப்பட்டார். வடபிராந்திய தற்காலிக முகாமையாளராக கேதீசன் நியமிக்கப்பட்டார்.
பக்கம் 18

## ஹெரோயினுடன் இருவர் நேற்றும் யாழ்.நகரில் கைது




யாழ்ப்பாணம், டிசெ. 01
690 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளை வியாபார நோக்கத்துக்காக வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் யாழ்ப்பாணம் திருநகர் பகுதியில் வைத்து நேற்றுக் கைது
பக்கம் 18

## குடாநாட்டிலும் கடும் மழை 3 தினங்கள் தொடர வாய்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 01
வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காணமாக யாழ். மாவட்டத்தில் கடந்த 3 நாள்களாகத் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இன்னும் மூன்று தினங்கள் இந்த மழை தொடரும்.
இவ்வாறு வளிமண்டலவியல் திணைக்களத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.
குடாநாட்டின் காலநிலை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-
யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியிலேயே அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்
பக்கம் 03

## பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக ரூ.10 ஆயிரம்

**தென்கொரியாவிலிருந்து மைத்திரிபால உத்தரவு**

கொழும்பு, டிசெ. 01
தெற்கில் இயற்கை இடரால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உதவி வழங்க முப்படையினரை ஈடுபடுத்துமாறும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடியாகத் தலா 10 ஆயிரம் ரூபா வழங்குமாறும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தென்கொரியாவிலிருந்து உத்தரவிட்டுள்ளார்.
பக்கம் 18

# நல்லிணக்கம், நல்லாட்சி என்பது தமிழர்களுக்கு பெயரளவில் தான்

## மன்னார் நிகழ்வில் வடக்கு மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன்

மன்னார், டிசெ. 01

நல்லிணக்கம் நல்லாட்சி என்பன தமிழர்களைப் பொறுத்தளவில் பெயரளவில்தான் உள்ளன என்று வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

சமூகப் பொருளாதார மற்றும் கலாசார உரிமைகளை அடிப்படை மனித உரிமைகளாகப் புதிய அரசமைப்பில் உறுதிப்படுத்துவோம் என்ற தொனிப் பொருளில் முன்னெடுக்கப்பட்ட 21 ஆவது உலக மீனவர் தின நிகழ்வுகள் மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

14 மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ், சிங்கள மீனவர்கள் பங்கேற்றிருந்த இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நல்லிணக்கம், நல்லாட்சி என்று பேசிக்கொள்ளும் இந்த அரசு கூட போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு விசேட கவனம் செலுத்தாமல் இருந்து வருகின்றது.

எங்களுடைய செயற்பாடுகள் யாரையும் புறந்தள்ளியோ எந்தவொரு சமுதாயத்தை புறக்கணித்தோ அமையவில்லை. எந்த மாவட்டமாக இருந்தாலும் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற அடிப்படையில்தான் நாங்கள் பார்த்து வருகின்றோம். அதன் அடிப்படையில்தான் மக்கள் நலன் சார்ந்த நலத்திட்ட உதவிகளைச் செய்து வருகின்றோம்.

இன்றைய சூழலில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் நிலை பெரும் இன்னல் நிறைந்ததாக காணப்படுகின்றது. அவர்களது பாதுகாப்பு, பிள்ளைகளின் பாதுகாப்பு என்பவற்றுடன் வாழ்வாதாரம் மற்றும் சமூகத்தில் அவர்களுடைய நிலை என்பன பெரும் கேள்விக்குறியாகவே இருந்து வருகின்றன.






இவ்வாறான நெருக்கடிகளில் இருந்து பெண் தலைமைத்துவக் குடும்பங்களைகட்டியெழுப்புவதற்கு எம்மாலான முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுப்பதில் கூடிய கவனம் எடுத்து வருகின்றோம் என்பதனை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மகளிர் விவகாரம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சுகள் நிதியும் இன்றி அதற்கான ஆளணியும் இன்றி பெயரளவிலேயே செயற்பட்டு வருகின்றன. வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் வழங்கப்படுகின்ற சொற்ப நிதியை கொண்டுதான் ஐந்து மாவட்டங்களிலும் உதவிகளைச் செய்ய வேண்டியுள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட மாகாணம் என்ற அடிப்படையில் எமக்குத் தேவை அதிகமாக இருக்கின்ற போதிலும் மிக சொற்ப அளவிலான நிதியே மத்திய அரசால் வழங்கப்படுகிறது.

இனவழிப்பு யுத்தம் காரணமாகவே அதிகமான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உருவாகியிருக்கின்றன. அதனால் போரை முன்னெடுத்த அரசு என்ற அடிப்படையில் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் முன்னேற்றத்துக்கு விசேட கவனம் செலுத்தியே ஆகவேண்டும்.

நல்லாட்சி, நல்லிணக்கம் என்பது தமிழர்களைப் பொறுத்தளவில் பெயரளவில்தான் இருந்து வருகின்றன. தமிழர் தாயகத்தில் நடந்தேறிய இனப் படுகொலைக் குற்றங்களுக்கான பொறுப்புக் கூறலில் இருந்து தப்பிக்கும் உபாயமாகவே நல்லிணக்கம் நல்லாட்சி என்ற பதங்களைத் தற்போதைய அரசு பிரயோகித்து வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

# நன்னீர் மீன்பிடியை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, டிசெ. 01

கிளிநொச்சி மாவட்டத்தில் நன்னீர் மீன் உற்பத்தியைஅதிகரிப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு நன்னீர் மீன் பிடியாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த இரு ஆண்டுகளாக ஏற்பட்டவறட்சிகாரணமாககுளங்களின் நீர் மட்டம் அடி நிலையைச் சென்றடைந்தமையால் நன்னீர் மீன் பெருக்கம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

பல குளங்களில் நன்னீர் மீன் முழுமையாக அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றன. தற்போது மழைவீழ்ச்சி இடம்பெற்று குளங்களின் நீர் மட்டம் அதிகரித்து வரும் நிலையில் குளங்களில்மீன்குஞ்சுகளை உற்பத்திக்காக விடுவதால் எதிர்காலத்தில் நன்னீர் மீன்பிடி வளர்ச்சி அடையும்.



இதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகளே மேற்கொள்ள வேண்டும். கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நன்னீர் மீன்பிடியை நம்பியே தங்களின் வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்கின்றனர்.

இந்த நிலையில், இரணைமடு, புதுமுறிப்பு, வன்னேரிக்குளம், கல்மடு, அக்கராயன்குளம்,பிரமந்தனாறு, கரியாலை நாகபடுவான் போன்ற பெரிய குளங்களிலும், மாவட்டத்தில் உள்ள ஏனைய சிறு குளங்களிலும் நன்னீர் மீன்பிடி இடம்பெற்று வருகிறதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

# ஆடைத்தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றிச்சென்ற பஸ் விபத்தில் சிக்கியது!

கொழும்பு, டிசெ. 01

ஹட்டன் பொலிஸ் பிரிவிற் குட்பட்ட சலங்கந்த பகுதியில், ஆடைத்தொழிற்சாலை ஒன்றிற்கு ஊழியர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று நேற்றைய தினம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

சலங்கந்தை பிரதேசத்தில் இருந்து ஹட்டன் நோக்கி பயணித்த இந்தப் பேருந்து சலங்கந்தை பகுதியில் வைத்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

திடீரென பேருந்தின் பிரேக் இயங்காத நிலையிலேயே பாதையோர மண் மேட்டில் மோதுண்டு விபத்துக்குள்ளா கியுள்ளது.

இந்த விபத்தினால் யாருக்கும் பாதிப்புக்கள் இல்லை என்றும் விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(க)

# சியோல் பெருநகரத்தின் கௌரவ குடியுரிமை ஜனாதிபதி மைத்திரிக்கு!



கொழும்பு, டிசெ. 01

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவுக்கு, தென்கொரியாவின், சியோல் பெருநகர அரசு, கௌரவ குடியுரிமை வழங்கி கௌரவித்துள்ளது.

தென்கொரியாவுக்கு மூன்று நாள் பயணத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சியோல் பெருநகர அரசின் முதல்வர், நேற்றுகௌரவகுடியுரிமையை வழங்கினார்.

இருநாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய நட்புறவின் அடையாளமாகவே இலங்கை ஜனாதிபதிக்கு இந்த கௌரவ குடியுரிமையை வழங்கப்பட்டது என சியோல் பெருநகர முதல்வர் தெரிவித்துள்ளார்.

(க)

# இலங்கைக்கு மேலுமொரு புயல் அபாயம்

கொழும்பு, டிசெ.01

கன்னியாகுமரி அருகே வங்கக்கடலில் உருவாகிய 'ஒகி' புயலைத் தொடர்ந்து மீண்டும் ஒரு பெரும் புயல் தமிழகத்தையும், இலங்கையையும் தாக்கும் அபாயம் உள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.




வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த ஆழ்ந்த காற்ற முத்த தாழ்வு மண்டலம் நேற்று 'ஒகி' புயலாக உருமாறியது, இதனால் கன்னியாகுமரிப் பகுதிகளில் கடும் காற்றுடன் கூடிய மழை வீழ்ச்சி பதிவாகிச் சீரற்ற கால நிலை தொடர்கின்றது.

'ஒகி' புயலின் எதிரொலியாகத் தென்தமிழகத்தில் தொடர்ந்து 36 மணித்தியாலயங்களுக்கு கனமழைநீடிக்கும் எனவும் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தப்புயல் தமிழ்நாட்டின் கடற்கரையைத் தாக்காது, அரபிக் கடல் நோக்கி நகர்ந்து செல்வதால், இது தொடர்பாக மக்கள் அச்சமடையத் தேவையில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும் புயலின் தாக்கம் அதிகரித்தவாறே காணப்படுகின்றது.

இந்நிலையில் அந்தமான் கடல்பகுதிக்கு அருகில் நேற்றுக் காலை புதிய காற்றமுத்த தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளது. இந்த காற்றமுத்த தாழ்வு மண்டலம் எதிர்வரும் 3ஆம் திகதி வலுவடைந்து புயல் சின்னமாக மாறும் வாய்ப்புகள் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த காற்றமுத்தம் புயலாக மாறுமிடத்து தமிழகத்தின் கரையோரப்பகுதிகளுக்குக் கடுமையான சேதங்கள் ஏற்படும் வாய்ப்பு உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

'ஒகி' புயலை விடவும் மோசமான பாதிப்புகளை இந்தப்புயல் ஏற்படுத்தக்கூடும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவித்தன.

## மின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எது. கொழும்பின்சில பகுதிகள், களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

மலையகப் பகுதிகளான இரத்தினபுரி, பதுளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலும் மின் தடை ஏற்பட்டுள்ளதாக அமைச்சு கூறியுள்ளது.

தொடர்ந்து பெய்து வரும் மழையின் காரணமாக மின் விநியோக நடவடிக்கைகளைச் சீர்செய்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சின் அபிவிருத்தி இயக்குநர் தெரிவித்தார். (ஐ)

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிலங்கா பொதுஜன முன்னணி கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

யாழ். மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல்3.15மணியளவில்அந்தக் கட்சிகட்டுப்பணத்தைச்செலுத்தியது.

தாமரை மொட்டுச் சின்னத்தில் அந்தக் கட்சி தேர்தலில் போட்டியிடுகின்றது.

ஈ.பி.டி.பி.யில் முக்கிய பதவிகளில் இருந்தவர்களே மஹிந்த ஆதரவு இந்தக் கட்சியில் இணைந்து யாழ். மாவட்டத்தின் முக்கிய பொறுப்புக்களில் உள்ளனர்.

இதேவேளை, சாவகச்சேரி நகர சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஈ.பி.டி.பி. முதன் முதலாகக் கட்டுப்பணத்தைச் செலுத்தியிருந்தது (ஐ)

## ஆஸி. செல்ல முற்பட்ட 31 பேர் படகு புயலில் சிக்கியதால் கைது

கொழும்பு, டிசெ.01

சட்டவிரோதமாகப் படகு மூலம் ஆஸ்திரேலியா செல்ல முற்பட்ட 31பேர் ஆராச்சிக்கட்டுவ் பொலிஸாரினால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.



கடந்த 28ஆம் திகதி முந்தல்–உடப்புப் பகுதியில் இருந்து இவர்கள் சட்டவிரோதமாகப் பயணித்த படகானது புயலில் சிக்குண்டதால் இவர்கள் ஆராச்சிக்கட்டுவ-கலுல் எலிய தீவில் கரையொதுங்கியுள்ளனர்.

இதில் 35 பேர் வரை பயணம் மேற்கொண்டபோதிலும்,31பேரை மாத்திரமே கைது செய்யப்பட்டனர் எனவும் ஏனையோர் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் பொலிஸார் கூறினர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் உடப்பு,முந்தல் மற்றும் முல் லைத்தீவுப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என ஆராச்சிக்கட்டுவ் பொலிஸார் குறிப்பிட்டனர். (ஐ)

## குடாநாட்டிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எது.

இரண்டாம் இடைநிலைப் பருவப் பெயர்ச்சி காலநிலையாலேயே தற்போது மழை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த மழை இன்னும்மூன்றுநாள்களுக்குத் தொடரும்.

கடந்த 27 ஆம் திகதி காலை 8.30 வரை இருந்து இரவு 8.30 வரையான காலப் பகுதியில் 42.9மில்லிமீற்றர்மழைவீழ்ச்சி யாழ்ப்பாணத்தில் பதிவாகியுள்ளது. மறுநாள் அதே நேர காலப் பகுதியில் 19.6 மில்லி மீற்றர்மழைவீழ்ச்சிபதிவாகியுள்ளது – என்றார்.

இதேவேளை, குடாநாட்டில் நேற்றுக்காலை முதல் தொடர்ச்சியாக மழை கொட்டியது. இதனால் தாழ் நிலப் பகுதிகள் பல வெள்ளத்தில்மூழ்கின. இதனால் அந்தப் பகுதிகளில் இருந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். (ஐ-7)

## சுவிஸில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு, வவுனியா பகுதிகளிலும் கைதான வாள்வெட்டுச் சந்தேக நபர்களிடம் வாள்கள், கோடரிகள், குண்டுகள் என்பன மீட்கப்பட்டிருந்தன. இந்த ஆயுதங்கள்உடுவில்பகுதியில்உள்ள ஒருவர் மூலமாகவே சந்தேக நபர்களுக்கு விநியோகிக்கப்படுவதாகவும், இவற்றுக்கான பணம் சுவிற்ஸர்லாந்தில்உள்ளசன்னா என்பவர் மூலம் அனுப்பப்படுவதாகவும் பொலிஸாரின் தொடர்ச்சியான விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

சன்னா என்பவர் ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் கொலை ஒன்றைச் செய்து நீதிமன்றத் தால் பிடியாணை பிறப்பிக்கப் பட்ட நிலையில் சுவிற்ஸர்லாந்துக்குத் தப்பிச் சென்றுள்ளார். அவரை அங்கிருந்து சர்வதேசப் பொலிஸார் ஊடாக இலங்கைக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது – என்றார். (ஐ -7)

## நிவாரணப் பணியில் இராணுவம்



கொழும்பு, டிசெ.01

சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரணப் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர் என இராணுவ ஊடகப் பேச்சாளர் ரொசான் செனவிரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு பகுதியினர் தற்போது நிவாரணம் வழங்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். மற்றைய பகுதியினர் தேவையேற்படும் பிரதேசங்களுக்கு அனுப்புவதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரின் 35 குழுக்கள் மாத்தறைப் பிரதேசத்திற்கும், 10 குழுக்கள் அகலவத்தைக்கும், 15 குழுக்கள் மில்லனிய பிரதேசத்திற்கும் , 6 குழுக்கள் பலப்பிட்டியவுக்கும், 20 குழுக்கள் காலிக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக விமானப்படையின் 30 பேர் அடங்கிய 26 குழுக்கள் விமானங்கள் மூலம் இரத்மலானை, அனுராதபுரம் மற்றும் ஹிங்குராங்கொடை ஆகிய பிரதான முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. 30 குழுக்கள் படகுகள் மூலம் தயார் நிலையில் உள்ளன.

மலையக ரயில் பாதைகளில் மண்சரிவுகள், மரம் முறிந்து விழுதல் காரணமாக ஏற்பட்டுள்ள ரயில் போக்குவரத்துத் தடையை சீர்செய்வதிலும் இராணுவக்குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. – என்றார்.

## தலைவர் பிரபாவின் பிறந்த நாளை கொண்டாடியவரிடம் விசாரணை

முல்லைத்தீவு, டிசெ.01

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் 63ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய இளைஞர் ஒருவர் நேற்றுப் பொலிஸாரினால் விசாரிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் அணியின் செயலாளர் பீற்றர் இளஞ்செழியன் என்பவரையே பொலிஸார் இவ்வாறு விசாரித்துள்ளனர்.

கடந்த 26 ஆம் திகதி முல்லைத்தீவுக் கடற்கரையில் தலைவர் பிராபாகரனின் புகைப்படம் ஒன்றைக் காட்சிப்படுத்திப் பிறந்த தினம் கொண்டாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில், தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் தலைவரது பிறந்த தினத்தை கொண்டாடுவது சட்டவிரோதமான செயல் என்று கூறிய முல்லைத்தீவுப் பொலிஸார், குறித்த இளைஞரிடம் வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்துள்ளனர் எனவும் கூறப்படுகிறது.

## விபத்தில் படுகாயமடைந்த மாணவன் பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம், டிசெ.01



மானிப்பாய்வீதி, ஆலடிப் பகுதியில் இடம் பெற்ற விபத்தில் படுகாயமடைந்த 17 வயதுடைய பாடசாலை மாணவன் சிகிச்சை பயனின்றிப் பரிதாபமாக உயிரிழந்தார். இந்த விபத்து நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை ஆறு மணியளவில் இடம்பெற்றது.

மானிப்பாய் பகுதியிலிருந்து உடுவிலுள்ள தனது வீட்டுக்கு மாணவன் ஸ்கூட்டி வகை மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். பிரதான வீதியால் சைக்கிளில் வந்த பெண்ணொருவர் குறுக்கு வீதிக்குத் திடீரெனத் திரும்பியதால் மோட்டார் சைக்கிளை கட்டுப்படுத்த முடியாமல் மாணவன், பெண்ணின் சைக்கிளுடன் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். எனினும் சிகிச்சை பயனின்றி மாணவன் உயிழந்தார்.

உடுவில் உதயசூரியன் வீதியைச் சேர்ந்த அடம்ஸ் நீல்சன் லியனாடோ அலோசியஸ் (வயது– 17) என்ற மாணவனே உயிரிழந்தார்.

மானிப்பாயிலுள்ள சர்வதேச ஆங்கிலப் பாடசாலையொன்றில் உயர்தரப் பிரிவில் அவர் கல்வி கற்று வருகிறார். கல்வியிலும் விளையாட்டிலும் திறமையான இவருடைய இறப்பு அப்பகுதி மக்களிடையே சோக நிலையைத் தோற்றுவித்துள்ளதை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை, இந்த விபத்தில் படுகாயமடைந்த மானிப்பாய், புதுமடம், உடுவில் தெற்கையைச் சேர்ந்த 33 வயதுடைய அமிர்தரஜனி சுரேந்திரன் என்ற பெண் தொடர்ந்தும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பிய்த்து உதறப்படப் போகும் புதிய அரசமைப்பு முயற்சிகள்

ஊசல் அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் மாறி, மாறி அலைவது போல உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களும் நடக்குமா, நடக்காதா என்று மாறி மாறி இழுபறிப்பட்ட பின்னர், இப்போது ஒரே காலத்தில் நாடு முழுவதும் நடக்கும் என்ற நம்பிக்கையைத் தரும் நிலைமைக்கு வந்திருக்கின்றது.

முன்னர் எதிர்பார்க்கப்பட்ட ஜனவரி கடைசி வாரத்துக்கு ஒரு சில நாள்கள் பின்னாகத் தேர்தல் நடைபெறலாம் என எதிர்பார்க்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

நீண்ட காலம் எதிர்பார்க்கப்பட்ட ஒரு தேர்தல் நடைபெறுவது வரவேற்கத்தக்கதே.

ஆனால், அதேசமயம் நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட - தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கிய - புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளை இந்தக் 'குட்டிப் பொதுத் தேர்தல்' அலை அள்ளிக் கொண்டு போய்விடுமா என்பதுதான் மறுபக்கத்தில் கவலைக்குரிய விடயமாகும்.

தேர்தல்கள் என்றாலே அரசியல் தரப்புகளுக்குள் ஒருபுறம் கூட்டணி சேரலும், மறுபுறம் கூட்டுக்குள் குழப்பங்களும் ஒருங்கு சேர அரங்கேறும் என்பது நமக்குத் தெரிந்ததுதான்.

இப்போதும் புதிய அரசமைப்பு முயற்சிகளுக்காக ஒன்றாக அமர்ந்திருந்த தரப்புகள் தேர்தல் பிரசார மேடைகளில் தமக்குள் சேறை வாரிக் கொட்டப் போகின்றன என்பது நிச்சயம்.

நல்லாட்சி அரசு என்ற பெயரில் ஒன்றிணைந்து ஆட்சி அமைத்திருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சியும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.கட்சியும் கூட இத்தேர்தலில் நேர் எதிராக மோதப் போகின்றன. புதிய அரசமைப்பு முயற்சிகளைக் கடுமையாக எதிர்த்து வரும் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியும் களத்தில் தனித்துக் குதிக்கப் போகின்றது.

போதாக்குறைக்கு ஜே.வி.பி. போன்ற நாலாவது தரப்பும் உள்ளது.

இந்த நான்கு தரப்புகளும் அடுத்த இரண்டு மாதங்களும் உள்ளூராட்சித் தேர்தல் விவகாரம் என்ற பெயரில் தெற்கில் கலக்கப் போகின்ற கலக்கத்தில் புதிய அரசமைப்பு முயற்சிகள் தூக்கி ஆழ்கடலில் வீசப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அதேபோன்ற ஒரு நிலைமைதான் வடக்கு, கிழக்கிலும் கூட.

கிழக்கிலும் வன்னிப் பகுதிகளிலும் முஸ்லிம் கட்சிகளும் புதிய அரசமைப்பு முயற்சிகள் குறித்து தூர்வாரிக் கொட்டுவது போல விமர்சனங்களைக் கொட்டப் போவது நிச்சயம்.

வடக்கு, கிழக்கில் தமிழர் தரப்பிலும் பிரதான இரண்டு அணிகள் களத்துக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒருபுறம் இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட், சமூக ஜனநாயகக் கட்சி என்பன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் அணி சேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மறுபுறத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன ஓரணியாகக் களம் இறங்கலாம் எனக் கருதப்படுகின்றது. ஆனால் அது இன்னும் உறுதியாகவில்லை. அத்தகைய கூட்டுக்கான முயற்சி பேச்சுக் கட்டத்திலேயே உள்ளது எனக் கூறப்படுகின்றது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அதிருப்தியாளர் குழு ஒன்றும் இதில் இணையும் என்றும், இக் கட்சிகள் எல்லாம் சேர்ந்து, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுக் சின்னத்துக்கு மாற்றாகத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் 'உதயசூரியன்' சின்னத்தில் போட்டியிடுவதற்கு வாய்ப்புகள் உள்ளன என்றும் கூறப்படுகின்றது.

இந்தியாவில் இருப்பது போன்ற 'மாநில சுயாட்சி'யை வலியுறுத்தும் தமிழர் விடுதலைக் கூட்டணியும், 'இரு தேசங்கள் ; ஒரு நாடு' என்ற நிலைப்பாட்டை எடுத்திருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தேர்தல் கூட்டுக்காக ஒரே கொள்கையில் எப்படி ஒன்றிணையப் போகின்றன என்பது தெரியவில்லை. எனினும், வீட்டைத் தோற்கடிக்க வேண்டும் என்ற ஒரே இலக்குக்காக இந்திய 'மெடல்' மாநில சுயாட்சியும், 'இரு தேசங்கள் - ஒரு நாடு' என்ற கோட்பாடும் இடையில் சந்திக்கும் ஒரு புள்ளியில் இதற்கான இணக்கம் எட்டப்படக்கூடும்.

எத்தகைய கூட்டுகள், இணைவுகள், இழுபறிகள் வந்தாலும் வடக்கு, கிழக்கிலும், தெற்கிலும் இந்தத் தேர்தலின் பிரதான பேசுபொருளாக அமையப் போவது புதிய அரசமைப்பு முயற்சிகள்தாம் என்பதில் சந்தேகம் ஏதும் இல்லை.

அந்த விடயங்கள் பிய்த்து உதறப்படப்போவது நிச்சயம். வடக்கு, கிழக்குக்கு சமஷ்டி என்ற பெயரில் நாட்டைப் பிரித்துக் கொடுத்துவிட இணங்கி விட்டார்கள் என்ற ஓலம் தெற்கில் ஓங்கி ஒலிக்கும். சமஷ்டியைக் கைவிட்டு ஒற்றையாட்சிக்கு நமது தலைமைகள் இணங்கி விட்டன என்ற கண்டனம் வடக்கு, கிழக்கில் ஓங்கி எதிரொலிக்கும்.

இந்தக் குட்டிப் பொதுத் தேர்தல் முடிவுக்கு வரும்போது வென்ற தரப்பு, தோற்ற தரப்பு என்பன தெளிவாகி விடும்.

ஆனால் தேல்தல் பிரசாரத்துக்காக பிய்த்து உதறப்படும் புதிய அரசமைப்பு முயற்சி மட்டும் அப்போது குப்பைக் கூடைக்குள் வீசப்பட்டுக் கிடக்கும் என்பதை மட்டும் இப்போதே கூறிவிட இயலும்.

# நல்லிணக்கம், மனித உரிமைகள் மேம்பாட்டுக்கான ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு கொரியா பாராட்டு



கொழும்பு, டிசெ. 01

தேசிய நல்லிணக்கம், மீள் கட்டமைப்பு மற்றும் மனித உரிமைகள் மேம்பாடு தொடர்பான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான அரசின் முன்னேற்றப் பணிகளுக்கு கொரிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

கொரியா – இலங்கை நாடாளுமன்ற நட்புறவுக்குழு பிரதிநிதிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று முன்தினம் மாலை சியோலில் அவர் தங்கியுள்ள கிரேண்ட் ஹயாட் ஹோட்டலில் சந்தித்தனர்.

சர்வதேச மன்றங்களில் குறிப்பாக கொரிய நெருக்கடியின் போது இலங்கை கொரியாவுக்கு வழங்கிய முழுமையான ஒத்துழைப்புக்கு அவர்கள் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தனர்.

இலங்கை நல்லிணக்கத்தையும் சுபீட்சத்தையும் அடைந்து கொள்ளும் என எதிர்பார்க்கின்றனர் எனக் குறிப்பிட்ட நாடாளுமன்ற குழுவினர், இந்த முயற்சியில் சர்வதேச சமூகத்தின் ஈடுபாடு தொடர்ந்திருக்கும் என்றும் தெரிவித்தனர்.

கொரிய மக்கள் மத்தியில் இலங்கை தொடர்பாக ஆர்வமூட்டும் இலங்கையின் அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிவரும் இந்த நாடாளுமன்றக்குழுவுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

# காலி, மாத்தறை ரேடியோ சமிக்ஞை கட்டடத் தொகுதியும் காலநிலையால் பாதிப்பு



கொழும்பு, டிசெ. 01

சீரற்ற காலநிலை காரணமாக காலி மற்றும் மாத்தறை ரேடியோ சமிக்ஞை கட்டடத் தொகுதிக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, சீரற்ற காலநிலையால் தொடந்துவ மற்றும் காலி கடற்றொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்றுக் காலை கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர அதிகாரிகளிடம் தகவல்களை கேட்டு அறிந்துள்ளார்.

தொடந்துவவில் இருந்து கடலுக்குச் சென்ற 3 மீன்பிடி வள்ளங்கள் காணாமற் போய் உள்ளன.

இதில் சென்ற மீனவர்கள் கரைக்குத் திரும்பியுள்ளனர். ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. காலையில் கடலுக்குச் சென்ற வள்ளமொன்று காணாமற்போய் உள்ளது.

காலி - தங்காலைப் பகுதியில் மீனவர் ஒருவரின் சடலம் காணப்படுகிறது எனவும் கடற்றொழில் பணிப்பாளர் ஜெனரால்கிரிஸ்டிலால்பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

# களுகங்கை, நில்வளகங்கையின் நீர்மட்டம் திடீரென அதிகரிப்பு!



கொழும்பு, டிசெ. 01

களுகங்கை, நில்வளகங்கை, ஜின் கங்கை ஆகியவைகளின் நீர்மட்டம் அதிகரித்து வருகிறது என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நதிகளின் தாழ்நிலை பிரதேசங்களில் உள்ள மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று இடர் முகாமைத்துவம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்தும் மழை பெய்வதால் தேவையான சந்தர்ப்பதில் இப் பிரதேசத்தில் இருந்து வெளியேற மக்களைத் தயாராக இருக்குமாறும் இத்திணைக்களம் தகவல் தெரிவித்துள்ளது.

இதேவேளை, குக்குளே கங்கையின் இரண்டு வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்புச் செயற்பாடு
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
சகலருக்கும் கல்வி சமத்துவமாய் வழங்குவோம். பாரினில் பெண்கள் சரிநிகராய் வளர்ச்சிபெற சமூகத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழித்திடுவோம்.
JSAC
16
2017
யாழ். சமூக செயற்பாட்டு மையம்

## நாளை

02.12.2017
சனிக்கிழமை
நட்சத்திரம் : பரணி மு.ப. 11.24 வரை
திதி : சதுர்த்தசி பி.இ.12.39 வரை
சுபநேரம் : 03.15 – 04.45 வரை
இராகுகாலம்: 9.15 – 10.45 வரை

# அடுத்தவாரம் கொழும்பு வருகிறது ஐக்கிய நாடுகளின் பணிக் குழு

UNITED NATIONS HUMAN RIGHTS

கொழும்பு, டிசெ. 01

தன்னிச்சையான தடுத்து வைப்புகள் தொடர்பான, ஐ.நா . பணிக் குழு அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளது.

இந்தக் குழுவின் மூன்று உறுப்பினர்கள், இலங்கையில் எதிர்வரும் டிசெம்பர் 4 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை தங்கியிருந்து மதிப்பீடுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

ஜோஸ் அன்ரனியோ குவேரா பேர்முடாஸ், லேஹ் ரூமி, எலினா ஸ்டெரெய்னோட் ஆகியோரே இலங்கைக்கு வரவுள்ளனர்.

இவர்கள், சிறைச்சாலைகள், காவல்நிலையங்கள் போன்ற தடுப்பு மையங்கள், இளைஞர் நிறுவகங்கள், புலம்பெயர் மற்றும் உளவியல் குறைபாடுள்ளவர்களையும் சந்திக்கவுள்ளனர்.

கொழும்பு வரும் இந்தக் குழுவினர், மேல், வடமத்திய, வடக்கு, கிழக்கு, தென், மத்திய மாகாணங்களுக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

இலங்கை அரசு, சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட பங்காளர்களையும் ஐ.நா. பணிக்குழுவினர் சந்திக்கவுள்ளனர்.

இவர்கள் தமது பயணத்தின் போது மேற்கொண்ட மதிப்பீடுகள் தொடர்பாக வெளிப்படுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை டிசெம்பர் 15 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

இலங்கை விஜயம் குறித்த இந்தக் குழுவின் இறுதி அறிக்கை, 2018 செப்ரெம்பர் மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (க)





## நில்வள கங்கையின் வெள்ளப் பெருக்கு

கொழும்பு, டிசெ. 01

நில்வள கங்கையின் மாத்தறை பானகமு பிரதேசத்தில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இதேபோன்று கேசேல்கமுவ ஓயாவில் ஹட்டன் பிரதேசத்தில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக நோர்வூட் மற்றும் பொகவந்தலாவ பிரதேசத்தில் பல வீடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

## சா/தர மாணவருக்கான கல்விக் கருத்தரங்கு

இணுவில் பொதுநூலக சன சமூக நிலையத்தின் ஏற்பாட்டில் க.பொ.த. சாதாரண மாணவர்களுக்கான இலவசக் கல்விக் கருத்தரங்கு 4 தினங்கள் நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை முதல் 4 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நான்கு தினங்களிலும் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை இணுவில் பொதுநூலகத்தில் இக் கருத்த ரங்கு நடைபெறவுள்ளது. பிரபல ஆசிரியர் குழுவால் நடத்தப்படவுள்ள இந்தக் கருத்தரங்கில் இந்த வருடம் க.பொ.த. சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பாதித்தோருக்கு நிவாரண உதவிகளை விரைவாக வழங்கி உதவுங்கள்

### மாவட்ட செயலர்களுக்கு பிரதமர் ஆலோசனை

கொழும்பு, டிசெ.01

அனர்த்தத்தின் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு விரைவாக நிவாரண உதவிகளை வழங்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மாவட்ட செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதேவேளை, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன இது குறித்து தெரிவிக்கையில், கடும் காற்றின் காரணமாக பல பிரதேசங்களில் வீடுகள் சேதமடைந்து இருக்கின்றன எனத் தெரிவித்தார்.

பிரதமரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக தாம் செயற்பட்டு வருகிறோம் என்றும் அவர் கூறினார். அத்துடன், இடர் அனர்த்தத்தை எதிர்கொள்ள இராணுவத்தினர் தயார் என்று இராணுவ பேச்சாளர் மேஜர் ஜெனரால் ரொஷான் சேனவிரத்ன தெரிவித்துள்ளார். (க)

## சுனாமி, புயல் ஏற்படலாம் என்று மக்கள் அச்சமடைய தேவையில்லை

### அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 01

தற்போது நாட்டில் நிலவும் சீர்ற்ற காலநிலை குறித்து மக்கள் அனாவசியமாக அச்சமடையத் தேவையில்லை என தேசிய பேரிடர் முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய சூழ்நிலை தாழமுக்கத்தால் ஏற்பட்டிருக்கிறது. இது இன்னும் ஓரிரு தினங்களில் சரியாகிவிடும். எனினும், மக்களைக் குழப்பும் வகையில், சுனாமி ஏற்படலாம், புயல் வீசப்போகிறது



என்றெல்லாம் சிலர் வதந்திகளைப் பரப்பி வருகிறார்கள். அவை குறித்து மக்கள் அச்சமடையத் தேவையில்லை.

இதுவரை சுனாமி ஏற்படுவதற்கான அறிகுறி எதுவும் பதிவாகவில்லை. மேலும், தாழமுக்கம் புயலாக மாறும் வாய்ப்பும் இல்லை. காலநிலை மாற்றங்கள் குறித்து வானிலை அவதான நிலையம் தொடர்ச்சியாக அறிவிப்புகளை வெளியிடும்.

எனவே, மக்கள் வீணே பயம் கொள்ள வேண்டியதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# ஆணைக்குழு முன் ஆஜரானமை குறித்து பிரதமர் ரணில் நாடாளுமன்றில் விளக்கம்

கொழும்பு, டிசெ. 01

பிணைமுறி தொடர்பான விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையிலேயே தான் ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராகி விளக்கமளித்தேன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளு மன்றில் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நான் பிரதமராகப் பதவி வகித்த காலகட்டத்தில் மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள்



குறித்த விசாரணைக்கு ஜனாதிபதி ஆணைக்குழு முன் ஆஜராகி விளக்கமளித்திருக்கிறேன். இதற்கு நான் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியுள்ளேன்.

எனினும் கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலத்தில் மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறிகள் கொடுக்கல் வாங்கல்கள் விசாரணைக் குட் படுத்தப்படவுள்ளன.

மேலும், நாடாளுமன்றுக்குத் தெரியாமல் அல்லது அறிவிக்காமல் பெருந் தொகைக் கடன்கள் பெறப் பட்டுள்ளன. நிதி தொடர்பான கொடுக்கல் வாங்கல் அனைத்து நடவடிக்கைகளையும் நடைமுறைப் படுத்தும் அதிகாரத்தை நாடாளுமன்றம் கொண்டுள்ளது.

அவ்வாறிருக்கையில் நாடாளுமன்றத்திற்குத் தெரியாமல் மஹிந்த ராஜபக்ச வின் ஆட்சிக் காலத்தில் பெருந் தொகையான கடன்கள் பெறப்பட்டுள்ளன. அதனாலேயே, நாட்டின் கடன் சுமை அதிகரித்துள்ளது.

எனவே, நாடாளுமன்றத்திற்கு தெரியாது பெறப்பட்ட வெளிநாட்டு கடன்கள் தொடர்பிலும் ஆராயந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

# பெண்களின் அரசியல் உரிமைகளை கட்சிகள் உறுதிப்படுத்த வேண்டும்

## விடுதலைப்புலிகள் கட்சியின் மகளிர் அணித் தலைவி செல்வி மனோகார்





தமிழ்பெண்களின் அரசியல் உரிமைகளைத்தமிழ் அரசியல் கட்சிகள் உறுதிப்படுத்த வேண்டும் எனத்தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள்கட்சியின் மகளிர் அணித் தலைவி செல்விமனோகர்தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, மண்முனை வடக்குப் பிரதேச செயலகத் திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள வறிய மக்களுக்கு வீடு களை அமைப்பதற்காகப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டுகருத்துதெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரி வித்துள்ளார். தொடர்ந்தும் கூறியவை வருமாறு:-

கடந்த ஆட்சிக்காலத்தை விட இந்த ஆட்சிக் காலத்தில் அரசியலில் பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங் கப்பட்டுள்ளதை நாங்கள் வர வேற்கின்றோம். எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்த லில் தமிழ் அரசியல்கட்சிகள் அதிகளவு பெண்கள் பிரதி நிதித்துவத்தை உள்வாங்கி அவர்களுக்கான அந்தஸ்தை வழங்கவேண்டும்.

இலங்கையில் 52 வீதமான வர்கள் பெண்களாக உள்ள போதிலும் எந்த அரசியல்வாதி களிடமோ, எந்த கட்சிகளி டமோ அவர்கள் தொடர்பான எந்தத்திட்டங்களும் இல்லை.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களில் அதிகளவான பெண்கள் களமிறக்கப்படும் போது அவர்கள் வெற்றி பெறு வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகளவில் காணப்படுகின்ற மையால் பெண்களுக்கான நலன்கள் தொடர்பான செயற் பாடுகளையும் அவர்களால் முன்னெடுத்துச் செல்லமுடி யும்.

இந்தவேளையில், எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்த லில் அதிகளவான பெண்க ளுக்கு பிரதிநிதித்துவதை வழங்க நடவடிக்கை எடுக்கு மாறு தமிழ் அரசியல்வாதி களிடம் இந்தச் சந்தர்ப்பத்தில் கோரிக்கை விடுக்கின்றேன்.

ஊழல் அற்ற அரசியல் நிலை மையைப் பெண்களால் முன் னெடுத்துச் செல்லமுடியும். ஒவ்வொரு வட்டாரத்திலும் பெண்களைக் களமிறக்கும் போது பெண்களின் அதிகள வான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சந்தர்ப்பம் ஏற் படுகின்றது.

அரசாங்கம்பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை 25 வீதமாக ஒதுக்கியுள்ளது. அந்த 25 வீதத்தை மட்டுமே வழங்க வேண்டும்என்பதற்குஇல்லை, அதற்கு அதிகமான உறுப் பினர்களையும் இணைத்து கொள்ளமுடியும்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி 34 வீதத்தை பெண்களுக்காக ஒதுக்கி யுள்ளது. அதேபோன்று ஏனைய கட்சிகளும் இட ஒதுக் கீட்டை வழங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

(க)



## கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரிப்பு

திருகோணமலை,டிசெ.01

திருகோணமலை நகரில் கட்டாக்காலி மாடுகளால், வீதி விபத்துக்கள் மற்றும் போக்குவரத்துகளுக்கும் இடையூறு ஏற் படுகின்றது எனப் பிரதேச மக்களும், பய ணிகளும் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பிரதேசவாசிகள் தெரி விக்கையில் -

வீதிகளில் விடப்பட்டுள்ள மாடுகளால் அந்தப் பாதையால் செல்லும் பயணிகள் அடிக்கடி விபத்துக்களுக்கு முகம் கொடுக் கின்றனர். நீதிமன்ற வீதி, மின்சார நிலைய வீதி, கிறீன் வீதி, சுங்க வீதி, பற்றிமா வீதி, தபாற்கந்தோர் வீதி போன்ற பகுதிகளில் இரவிலும், பகலிலும் கட்டாக்காலி மாடுகள் வீதிகளில் திரிகின்றன.

மாடு உரிமையாளர்களும் எந்த விதமான நடவடிக்கைகளும் எடுப்பதில்லை.இவ்வாறு மாடுகள் வீதிகளில் திரிவதால் சிறு பிள்ளை கள் பாடசாலைக்கு மற்றும் தனியார் வகுப்புகளுக்குச் செல்வதற்கு அச்சப்படுகின் றார்கள்.

எனவே, கட்டாக்காலி மாடுகளின் விட யத்தில் திருகோணமலை நகர சபை கூடிய கவனம் செலுத்திச் சட்ட ரீதியாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என வும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரிகள் இடமாற்றம் கேட்டு வரவேண்டாம்



ஆளுநர் ரோஹித போகொல்லாகம

கிழக்கு மாகாணத்தில் புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசி ரியர்கள் தங்களுக்கு வழங்கப் பட்ட பாடசாலைகளுக்கு கட மைக்குச் செல்லுமாறும், இட மாற்றங்களைப் பெற்றுத்தருமாறு கோரி வர வேண்டாம் எனவும் கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம தெரி வித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகமவின் மக்கள்சந்திப்பு நேற்று முன்தினம் கிழக்கு மாகாண சபையில் நடை பெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் கல் வித்துறை பின்னடைந்து காணப் படுவதை நான் விரும்பவில்லை. கிழக்கு மாகாணக் கல்வி அமைச் சும், கல்வித் திணைக்களமும் ஆசிரியர் பற்றாக்குறை காணப் படுகின்ற பாடசாலைகளைத் தெரிவுதசெய்தே ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பட்டதாரி ஆசிரியர்கள் தங் களுக்கு வழங்கப்பட்ட நியமனங் களைப் பெற்றுக் கிராமப்புற மக்களையும், கிழக்கு மாகாணத் தையும் கல்வியில் முன்னேற்ற மடையச் செய்ய வேண்டுமென வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் என்ற வகையில்என்னைச்சந்திப்பதற்கு உங்களுக்கு உரிமைகள் இருந்த போதிலும் புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரிகள் இடமாற்றம் பெற்றுத்தருமாறும், பாடசாலை களை மாற்றித் தங்களுக்கு இலகு வான இடத்தை வழங்குமாறு கோரியும் வர வேண்டாம் என கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம தெரி வித்துள்ளார்.

## கோழிக் கூண்டில் இருந்து சிறுவன் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு நிந்தாவூர் 09 ஆம் பிரிவைச் சேர்ந்த 6 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவன் ஒருவன் அவரது வீட்டிலுள்ள கோழிக் கூண்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளான் எனச் சம்மாந் துறை பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

முகம்மது பாயிஸ் முகம்மது நிஹாஜ் (வயது 11) எனும் பாட சாலை மாணவனே இவ்வாறு சட லமாக மீட்கப்பட்டுள்ளான். இந் தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:

நிந்தாவூர் அல்மினா வித்தியா லயத்தில் 6 ஆம் தரத்தில் கல்வி பயின்றுவரும் இந்த மாணவன் இறுதியாண்டுப் பரீட்சை எழுதி விட்டு நேற்று முன்தினம் காலை சுமார் 11.30 மணியளவில் வீடு சென்றுள்ளான்.

பின்னர் மாணவன் வீட்டிலுள்ள ஏனைய பிள்ளைகளுடன் விளை யாடிக் கொண்டிருந்தான் எனவும் பகலுணவு வேளையில் காணாமற் போயுள்ளான் எனவும் தெரிவிக் கப்படுகின்றது. இந்த நிலையில் காணாமற்போன மாணவனை வீட்டில் உள்ளவர்கள் தேடியுள்ள னர்.

இறுதியில் அவரது வீட்டுக் கிணற்றடியில் அமைக்கப்பட் டுள்ள கோழிக் கூண்டில் மாண வன் சடலமாக மீட்கப்பட்டுள் ளான்.இதனையடுத்து அந்தச் சிறு வனின் உடல் உடனடியாக வைத் தியசாலைக்கு எடுத்துச் செல் லப்பட்ட நிலையில் சிறுவன் மர ணித்து விட்டான் எனவைத்தியசா லையில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் நிந்தாவூர் ஆதார வைத்தியசாலையில் வைக் கப்பட்டுள்ளநிஹாஜின்சடலத்தை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றப் பதில் நீதிபதி ஏ.எம். நஃீல், சம்மாந் தறைப் பொலிஸாருடன் வருகை தந்து பார்வையிட்டார்.

அத்துடன் உறவினர், அயலவர் களையும் விசாரணை செய்த பின்னர் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

# ரயில் போக்குவரத்து பாதிப்பு

கொழும்பு,டிசெ. 01

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ரயில் பாதைகளில் மண்சரிவு மற்றும் மரம் முறிவுகள் ஏற்பட்டு ரயில் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய களனிவெளி ரயில் வீதி, அவிசாவளை தொடக்கம் கொட்டாவ வரையிலான ரயில் வீதியில் பல இடங்களில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை தொடக்கம் நானு ஒயா வரையிலான ரயில் போக்குவரத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.



மேலும் கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்கள் மழை காரணமாக அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

பல இடங்களில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன என்றும் வீதிகள் வெள்ளம் சூழ்ந்து காணப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை வரையில் பல வீடுகள் உள்ளிட்ட கட்டடங்களும் சேதமடைந்திருக்கின்றன அனர்த்த முகாமைத்துவ மையம் தெரிவித்துள்ளது.

சீரற்றக் காலநிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன என அனர்த்த முகாமைத்துவ மையம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, மண்சரிவு ஏற்படக்கூடிய இடங்களில் உள்ள மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க)

# தொடரும் கடும் காற்றும் கடல் கொந்தளிப்பும்

கொழும்பு, டிசெ. 01

நாட்டின் தென்மேற்குதிசையின் அரேபியா கடல் பிரதேசத்தில் நிலவிய தாழமுக்க நிலை தற்போது தாழ்வுநிலையை அடைந்து கொழும்பில் இருந்து 300 கிலோ மீற்றர் தூரத்தில் அதாவது மேற்கு திசையாக நிலைக்கொண்டு இருக்கிறது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இது எதிர்வரும் சில மணித்தியாலங்களில் சூறாவளியாக மாறி வடமேல் திசையை நோக்கி நகரக்கூடும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

தெற்கு சப்பிரகமுவ மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில்



சில இடங்களில் 100 இற்கும் 150 இடைப்பட்ட மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும்.

இந்த காலநிலை எதிர்வரும் 12 மணித்தியாலங்களுக்கு ஏற்புடையதாகும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக நாட்டின் தென்மேற்கு பிரதேசத்தில் கடும் மழை பெய்வதுடன் கடும் காற்றும் வீசக்கூடும்.

நாட்டின் மேற்கு மற்றும் தென் மேற்கு கரையோரத்துக்கு அப்பால் ஆழ்கடல் மற்றும் ஆழ்கடல் அற்ற பிரதேசங்களில் மழை பெய்யக்கூடும். காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 90 அல்லது 100 கிலோமீற்றர் கொண்டுள்ளதாக அமைந்திருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலைகளுக்கு விடுமுறை: பரீட்சைகள் பிற்போடப்பட்டன

கொழும்பு, டிசெ. 01

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக சில மாகாணங்களில் உள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றுத் திட்டமிடப்பட்டிருந்த இறுதித் தவணை பரீட்சைகள் யாவும் பிற்போடப்பட்டுள்ளன என்றும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேல் மாகாணம், தென் மாகாணம், மத்திய மாகாணம், ஊவா மாகாணம், ஆகிய மாகாணங்களில் உள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் மேலும் தெரிவித்துள்ளார்.

# முப்படையினரும் தயார் நிலையில்!



கொழும்பு, டிசெ. 01

எந்தவோர் இடர் நிலையையும் எதிர்கொள்ளக் கூடிய வகையில் பொலிஸாரும், முப்படையினரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இடர்நிலைமையிலிருந்து மக்களை மீண்டெழச் செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் சட்ட ஒழுங்கு அமைச்சு அறிவித்துள்ளது.

## வழமை போன்று விமான சேவைகள்

கொழும்பு, டிசெ. 01

விமான சேவைகள் வழமை போன்று இடம்பெற்று வருகின்றன என கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடமையில் உள்ள முகாமையாளர் தெரிவித்துள்ளார்.




நேற்றுமுன்தினம் சீரற்ற காலநிலையின் காரணமாக இரண்டு விமானங்கள் மத்தள விமான நிலையத்திற்கு திசை திருப்பப்பட்டன.

மீண்டும் கட்டுநாயக்க விமான நிலையத்தை இவை வந்தடைந்தன என்றும் அவர் கூறியுள்ளார்.

## கொழும்பு — பதுளை வீதி போக்குவரத்துக்குத் தடை

கொழும்பு, டிசெ. 01

மண்சரிவு காரணமாக கொழும்பு - பதுளை வீதியில் போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனால், இந்த வீதியில் பெரும் வாகன நெரிசல் நிலவுவதாகவும் வாகன சாரதிகள் மாற்று வீதிகளை பயன்படுத்துமாறும் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

ஹப்புத்தளை - பேரகலை பகுதியில் இடம்பெற்ற மண்சரிவு அனர்த்தத்தால் குறித்த வீதியில் போக்குவரத்து தடையேற்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# யானைகளால் மக்கள் நெருக்கடி; அடுத்த ஆண்டில் தீர்வுத் திட்டம்!

கொழும்பு, டிசெ. 01

யானைகளால் மக்களுக்கு ஏற்படும் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண அடுத்த ஆண்டு தீர்வுத் திட்டம் அமுலாக்கப்படும் என நிலை பேறான அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சின் செயலாளர் மீகஸ்முல்ல தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சின் செயலாளர் மீகஸ்முல்ல இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

அடுத்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் தொடக்கம் யானைகளின் தொகையைக் கணக்கெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இம்முறை வரவு- செலவுத் திட்டத்தின் ஊடாக நிலைபேறான



அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சுக்கு 417 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

இந்தத் தொகையில் 78 கோடி ரூபா வனஜீவராசிகள் திணைக்களத்திற்கும், 57 கோடி ரூபா மிருகக்காட்சிசாலை திணைக்களத்துக்கும், 36 கோடி ரூபா தாவரவியல் பூங்கா திணைக்களத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் மூன்று திணைக்களங்களினதும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை இலங்கை அரிசியென்று கூறி சிலர் மோசடி!

கொழும்பு, டிசெ. 01

சில அரசி ஆலை உரிமையாளர்கள் கொழும்பு சந்தையில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை இலங்கையில் உற்பத்தி செய்த அரிசி எனக் கூறி மோசடி செய்கின்றனர் எனத் தகவல் கிடைத்துள்ளது.

வரவு - செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் 11 ஆம் நாள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வர்த்தககைத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், அரச தொழல் முயற்சி அபிவிருத்தி ஆகிய அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டன.

இந்த விவாதத்தில் உரையாற்றியபோதே கடற்றொழில் மற்றும் நீரியில் வள அமைச்சர் மஹிந்த அமரவீர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசு பதவியேற்றவுடன் எரிபொருள் மற்றும் எரிவாயு சிலின்டர் விலைகளை குறைத்து அத்தியாவசிய பொருள்களின் விலைகளும் குறைக்கப் பட்டன.

சில அரிசி ஆலை உரிமையாளர்கள் கொழும்பு சந்தை யில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை கொண்டு சென்று இலங்கையில் உற்பத்தி செய்த அரிசி எனக் கூறி மோசடி செய்கின்றனர் எனத் தகவல் கிடைத்துள்ளது.

இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் படும். நுகர்வோர் அதிகார சபை வலுப்படுத்தப்பட வுள்ளது.

வறட்சியாலும், வெள்ளப் பெருக்காலும் பாதிக்கப் பட்ட மக்களுக்கு இழப்பீடாக மூவாயிரத்து 800 கோடி ரூபா வரை செலுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நிதி இராஜாங்க அமைச்சர் இரான் விக்ரமரத்ன சபையில் கருத்துத் வெளியிடுகையில்-

அரசியல் தீர்வை பொருளாதார சுதந்திரமாக பரிண மிக்கச் செய்ய வேண்டும்.

கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் 200 பேர் சர்வதேச சந்தைகளுக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள் என்று தெரிவித்துள்ளார்.

(இ)

## தினசரி ராசி பலன் 30.11.2017

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் கார்த்திகைத் திங்கள் 18ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை பூரணைத் திதி இரவு 9.17 மணி வரை. பின்னர் பிரதமை. நட்சத்திரம் - கார்த்திகை காலை 9.21 மணி வரை பின்னர் ரோகினி. சித்தயோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** - *மாலை 4.20மணி முதல் 5.46 மணி வரை.*

**சுபநேரம்** - *பகல் 9.19மணிமுதல் 10.48 மணி வரை.*

**திவசம் செய்ய வேண்டிய திதி** - *கார்த்திகை மாத பூரணை விரதம்*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *ரோகினி*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்:** யோகமான நாள் பணபலம் அதிகரிக்கும். குடும்ப உறவு நன்றாக இருக்கும். புதிய முயற்சி நல்வர வேற்பைத் தரும் அரசு வழியால் வீடு, காணி என்பன கிடைக்கும்.

**ரிஷபம்:** மகிழ்ச்சியான வாரம். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக் கும். எண்ணிய கருமங்கள் துல்லியமாய் நிறைவேறும்.

**மிதுனம்:** சலனம் மிகுந்த வாரம் ஆகும். பணவரவு குறையும். வாழ்க்கை செலவுகளைச் சமாளிக்க முடியா மல் தடுமாற்றம் உண்டாகும். கடன்பட நேரும். குடும் பத்தில் ஒற்றுமை உணர்வு குறையும்.

**கடகம்:** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரள மாக இருக்கும். குடும்பத்தில் அன்னியோன்யம் அதிகரிக் கும். வியாபாரம் பன்மடங்கு பெருகும். நண்பர்களின் சகாயம் கிடைக்கும்.

**சிம்மம்:** மத்திமமான வாரம். செலவு சமமாக இருக் கும். எண்ணிய காரியம் தடைப்படும். குடும்ப உறவு சீராக இருக்கும். தேகக்குறைவு ஏற்படும். வைத்திய செலவுகள் உண்டாகும்.

**கன்னி:** இனிமையான வாரம். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் இனிமை கொலுவிருக்கும். நினைத்தவை நிறைவேறும். புண்ணிய யாத்திரைகள் மேற்கொள்வார்கள்.

**துலாம்:** அலைச்சல் மிகுந்த வாரம் சுயதொழிலில் அலைச்சல்கள் அதிகரிக்கும். சிலர் அரசாங்க வேலை தேடி அலைவார்கள் வீடு தேடித்திரிவார்கள்.

**விருச்சிகம்:** சமபலன்கள் உள்ள வாரம். பொருளாதாரம் சுமாராக இருக்கும். வரவுக்குமீறிய செலவு உண்டாகும். குடும்ப சுகம் ஓரளவு சீராக இருக்கும்.

**தனுசு:** ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவில் அந்நியோன்யம் அதிகரிக்கும். பணிபுரியும் இடத்தில் வசைபாடிய வர்களும் இணக்கமாக இருப்பார்கள்.

**மகரம்:** இன்பமான வாரம் ஆகும். பணம் தாராளமாக புழங்கும். குடும்பத்தில் சந்தோசம் அதிகரிக்கும். இதுவரை பிரிந்திருந்த உறவுகள் ஒன்று சேரும்.

**கும்பம்:** கவலையான வாரம். பொருளாதாரம் நலி வடையும். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் ஏற்படும். தொழிலதிபர்களுக்கு முன்னேற்றம் சிரம மாக இருக்கும்.

**மீனம்:** மத்திமமான வாரம். தொழில்வரவு அதிகமான செலவுகளும் தொழில் மந்த நிலை உண்டாகும். பழக்கமில்லாதவர்களிடம் ஏமாற வேண்டி வரும். கவனம் தேவை.

**சந்திராட்டமநாள்:** சித்திரை 3ம் 4ம் பாதம் சுவாதி விசாகம் 1ம் 2ம் 3ம் பாதங்களில் பிறந்தோர் சுப கருமங்களில் ஈடுபடுவதை தவிர்க்கவும்.

## அரியாலை இளைஞன் சுட்டுக்கொலை; புலனாய்வாளர்களின் விளக்கமறியல் நீடிப்பு!



அரியாலை மணியந்தோட்டம் பகுதியில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சிறப்பு அதிரடிப் படையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் இருவரின் விளக்கமறியல் எதிர்வரும் 14 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டது.

கடந்த மாதம் 22ஆம் திகதி அரியாலை கிழக்கு மணியம் தோட்டம் வசந்தபுரம் முதலாம் குறுக்கு வீதிப் பகுதியில் 24 வயதுடைய டொன்பொஸ்கோ டினேசன் என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இந்த இளைஞர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பான விசாரணைகள் யாழ்ப்பாண தலைமையக பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு பின்னர் பொலிஸ் மா அதிபரின் பணிப்பின் பேரில் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சிறப்பு அதிரடிப்படையின் புலனாய்வு அதிகாரி உட்பட இருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு யாழ்ப்பாண நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிலையில் சந்தேக நபர்கள் யாழ்ப்பாண சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகள் தொடர்கின்றன என மன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

இதன்காரணமாக சந்தேக நபர்கள் இருவரையும் டிசெம்பர் 14ஆம் திகதிவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் கட்டளையிட்டார்.

## அங்குராப்பணக் கூட்டம்

வடக்க மாகாண கல்வி நிர்வாக சேவை தொழில் வாண்மையர் சங்கத்தின் அங்குராப்பணக் கூட்டம் நாளை சனிக்கிழமை 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அமைப்புக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

(இ)

## சங்கானையில் நாளை பண்பாட்டுப் பெருவிழா

### மாவட்ட செயலாளர் வேதராயன் தலைமையில்

யாழ்ப்பாணம், டிசெ.01

யாழ். மாவட்ட கலை கலாசாரப் பேரவையும் மாவட்ட செயலகமும் இணைந்து நடத்தும் பண்பாட்டு பெருவிழா நாளை சனிக்கிழமை காலை 9மணிக்கு சங்கானை கலாசார மத்திய நிலையத்தில் யாழ். மாவட்ட செயலாளரும் யாழ். மாவட்ட கலை கலாசார பேரவைத் தலைவருமான நா.வேதநாயகன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர் திருமதி. அபிராமி முரளி, கொழும்பு கலைகலாசார அலு வல்கள் திணைக்களப் பணிப் பாளர் திருமதி அனுஷா கோகுல பர்னாந்து ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் கலா பூஷனம் சுப்பையா கணபதிப்பிள்ளை, பண்டிதர்ம.நடதம் பேசுவரன் மிருதங்க வித்துவான் மா. சிதம்பரநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

தலைமையுரை, சிறப்புரைகளைத்தொடர்ந்து மல்லாகம், புத்தாக்க அரங்கு இயக்கத்தின் வாழ்க தமிழ் நாடகம் யாழ். முத்துக் கைந்நூல் வெளியீடு, யாழ் முத்து விருது வழங்கல் என்பன இடம்பெறும்.

தொடர்ந்து வெளியீட்டுரையை யாழ். மாநகர சபை ஆணையாளர் கவிஞர் இ.தா. ஜெயசீலன் ஆற்றுவார். அதை தொடர்ந்து வடக்கு மாகாண சபைஉறுப்பினர்த.குருகுலராசாவின் நிதி அனுசரணையில் தயாரிக்கப்பட்ட கப்பற்பாட்டு ஆவணப்பட வெளியீடு பிரதம விருந்தினரிதும் உரை தொல்புரம் காவியத்தின் யமதர்மன் தீர்ப்பு இசை நாடகம் நடைபெறும்.

(இ)

## சமாதான நீதவான்



யாழப்பாணம் குவாஸி அபூபக்கர் வீதியைச் சேர்ந்த மார்க்க அறிஞர் மௌலவி அல்ஹாஜ் அப்துல் மஜீத் அப்துல் அஸீஸ்(காஸிமி) மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி ஜெ. கஜநிதி பாலன் முன்னிலையில் அகில இலங்கைக்குமான சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

யாழ்ப்பாணம் சிவலை பள்ளிவாசலில் கதீபாகக்கடமையாற்றி வரும் இவர் யாழ் மக்களுக்கு தன்னலமற்ற சமூகப் பணிகளை அர்ப்பணிப்புடன் அன்புடனும் ஆதரவுடனும் செய்து தனக்கே உரித்தான அமைதிபேணும் செயற்படும் மார்க்க அறிஞராவார். மௌலவி அஸீஸ் யாழ் கிளிநொச்சி மாவட்ட உலமா சபை சர்வமத பேரவையின் தலைவராகவும் கடமையாற்றி வருகின்றார்.

தன்னைப் போன்ற ஒரு மார்க்க அறிஞரை உருவாக்க வேண்டும் என்ற வேணாவுடன் இவரை வழிநடத்திய இலங்கை வானொலி முஸ்லிம் சேவை புகழ் மர்ஹூம் அல்ஹாஜ் எம்.ஐ.எம்.மீரான் முஹிதீன் ஆலீம் அவர்களின் பேரனாரும் யாழ்ப்பாணம் மர்ஹூம் அல்ஹாஜ் அப்துல் மஜீத் மர்ஹூமா ஹாஜியானி ஹப்ஸா உம்மா தம்பதியினரின் புதல்வனும் ஆவார்.

- புன்னியாமீன் -



# ஆட்கொல்லி எய்ட்ஸ்

20 ஆம் நூற்றாண்டில் இறுதிப்பகுதியிலிருந்து உலகை ஆட்டிப் படைக் கும்பயங்கர ஆட்கொல்லி நோயாகவே எய்ட்ஸ் இனங்காணப்பட்டது. இந்த கொடிய நோயால் உயிரிழப்பவர்களின் எண் ணிக்கை இன்றுவரை நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே செல்கிறது. அதே நேரம், அனைத்து நாடுகளும் இந் நோயின் பாதிப்பிலிருந்து விடுவிப்ப தற்கான முயற்சிகளைத் தொடர்ந்து மேற் கொண்டு வந்தபோதிலும்கூட, இந்த நோயை பூரணமாகக் கட்டுப்படுத்த இன்றுவரை எந்தவித கண்டுபிடிப்புக் களும் மேற்கொள்ளப்படவில்லை.

உலகளவிலான எய்ட்ஸ் நோய் எதிர்ப்பை குறிக்கும் சிவப்பு நாடாசின்னம் அல்லது உலக எய்ட்ஸ் விழிப்பு ணர்வு தினம் ஆண்டுதோறும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி அனுஸ்டிக்கப்படுகிறது.

இந்நாளில் எய்ட்ஸ் நோய் பற்றியும், அதன் கொடிய விளைவுகள் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை பிர தான நோக்காகக் கொண்டு திட்டமி டப்படுகின்றது.

1981ஆம் ஆண்டில் உலகின் முதலா வது எயிட்ஸ் நோயாளி அமெரிக்காவில் (U.S.A) கண்டுபிடிக்கப்பட்டார். முதலாம் நோயாளி இனங்காணப்பட்டு ஏழு ஆண்டு களுக்குள் 1988ம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை உலக சுகா தார ஸ்தாபன (W.H.O.) அறிக்கையின் படி, 119, 818 நோயாளர்கள் பதிவாகியி ருந்தனர்.

இந்நிலையில், எய்ட்ஸ் தினம் பற்றிய எண்ணக்கரு முதலாவதாக 1988 இல் நடைபெற்ற, எய்ட்ஸ் பற்றிய உலக சுகா தார அமைச்சர் மாநாட்டில் உருவானது. இம்மாநாட்டிலேயே எய்ட்ஸ் தினம் அனுஷ் டிக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட் டதுடன், டிசெம்பர் மாதம் முதலாம் திகதி இத்தினத்தை அனுஸ்டிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை முடிவெடுத் தது. இதையடுத்து அரசுகளும் தன் னார்வத் தொண்டர் நிறுவனங்களும் இந்நாளை உலகம் முழுவதும் நடை முறைப்படுத்தி வருகின்றன.

பல்வேறு நோய்கள் தாக்கப்பட்ட ஒருவருக்கு அவருடைய உடலின் நோய் எதிர்ப்பு சக்தி குறையத் தொடங்கியிருப் பதை மருத்துவ பரிசோதனை உறுதி செய்யும் நிலைதான் எய்ட்ஸ் என்று



உலக எய்ட்ஸ் விழிப்புணர்வு தினம் இன்று (டிசெம்பர் 01) அகும். அதனையொட்டி இந்த ஆக்கம் வெளியிடப்படுகிறது.

அழைக்கப்படுகிறது.

**எய்ட்ஸின் வரலாறு**

ஜுன் 5, 1981அன்று அமெரிக்கா வைச் சேர்ந்த நோய்கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் சி.டி.சி. ஆண் ஓரினச் சேர்க்கை கொண்டிருந்த 5 நபர்களிடம் ஓர் அரிய வகை நிமோனியாவைக் கண் டறிந்து ஓர் அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கையே எய்ட்ஸ் கண்டறியப் பட்டதற்கான முதல் ஆவணமாகும். முதலில் எய்ட்ஸ் என்பது ஓரினச்சேர்க் கையோடு தொடர்புடைய நோய் எதிர்ப்பு குறைப்பாடு என்று அழைக்கப்பட்டது. ஓரினச்சேர்க்கை புற்றுநோய் என்றும் இது ஆரம்பத்தில் அழைக்கப்பட்டது. இவ்வாறாக எயிட்ஸ்நோய் 1981 ஆம் ஆண்டிலேயே அறியப்பட்டபோதிலும், அதை உண்டாக்கும் வைரஸ் கிருமி 1983ஆம் ஆண்டிலேயே இனங்காணப் பட்டது. பிரான்ஸ் நாட்டில் உள்ள பாஸ்டர் விஞ்ஞானக் கூடத்தில் (Institute Pasteur) பிரான்ஸ் நாட்டு விஞ்ஞானி லூக் மொண்டிக்கயர் எனும் விஞ்ஞானி யால் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. அப் பொழுது இது L.A.V வைரஸ் (Lymp hadenopathy associated Virus) என்று பெயரிடப்பட்டது.

1984 ம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள தேசிய புற்று நோய் நிறுவனம் இக்கிருமிதான் எயிட்ஸ் நோயை உண்டாக்குகிறது என்பதை உறுதிப்ப டுத்தியது. அப்பொழுது இதற்கு H.I.V type III வைரஸ் (Human T-lym photrophic Virus type III) என்று பெயரிடப்பட்டது. 1986 ம் ஆண்டில் தான் தற்போது பயன்படுத்தப்படும் HIV வைரஸ் (Human (\VÐ¦) I mmuno deficiency (நீர்ப் பீடனக் குறைபாடு) Virus (வைரஸ்) என்ற பெயர் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பொதுவாக HIV மனித உடலில் உள்ள எல்லாத் திரவங்களிலும் படிந்தி ருக்கிறது என்றாலும் கூட, இரத்தம், விந்து, பெண்ணுறுப்புகளில் உருவாகும் திரவம், தாய்ப்பால் ஆகியவற்றின் வாயிலாகத்தான் பரவுகின்றது. எனவே ஆண், பெண் உடலுறவின் போது பாது காப்பு முறைகளைக்கையாள்வது அவசி யமாகின்றது. எச்.ஐ.வி தொற்று உள்ள வருடன் பாதுகாப்பற்ற உடல் உறவு கொள்வோருக்கு இந்த எச்.ஐ.வி தொற்றி விடுகிறது. 80 சதவீத எய்ட்ஸுக்கு கார ணம் பாதுகாப்பற்ற உடல் உறவுதான் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 25 வய துக்குட்பட்ட இளைஞர்களுக்கு எய்ட்ஸ் அதிகமாக பரவுகிறது. அதற்கு காரணம் அந்த வயதில் அவர்கள் பாலுறவில் அதிக நாட்டமிக்கவர்களாக இருக்கின்றமையால் பாதுகாப்பான உடல் உறவை மறந்து விடுகிறார்கள். நீங்கள் எப்படிபட்டவராக இருந்தாலும், எங்கு வாழ்கிறவராக இருந் தாலும் எச்.ஐ.வி தொற்று பற்றிய விழிப் புணர்வுடன் செயற்பட வேண்டும் என்று தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனம் மற்றும் யுனிசெவ் கூட்டாக வெளியிட் டுள்ள கையேட்டில் தெரிவித்துள்ளது.

மேலும் போதைப் பொருள்களைப் பயன்படுத்துகையில் சுத்தம் செய்யப் படாத ஊசியை ஒருவருக்கொருவர் செலுத்திக் கொள்வதன் மூலமாகவும் HIV பரவுகிறது. இதே போல் அறுவை சிகிச்சையின் போது சுத்திகரிக்கப்படாத ஆயுதங்களைப் பயன்படுத்துவதனா லும், HIV பரவக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. அதே நேரம் HIV உள்ள இரத்தம் மூலமாகவும் எளிதாக பரவுகிறது.

பாதிக்கப்பட்ட தாயிடமிருந்து குழந் தைக்கு பரவுதல் எனும் போது கர்ப்ப காலம், பேறு காலம், தாய்ப்பால் புகட்டும் காலம் ஆகிய காலங்களில் குழந்தைக்கு HIV பரவுகிறது. எயிட்ஸ் நோயுற்றவரின் உடற் திரவங்களுடன் தொடர்பு ஏற்பட்ட எவரையுமே இந்நோய் தாக்கக்கூடும். அதே நேரம் கொனிரியா (Gonorrohoea), சிபிலிஸ் (Syphilis), ஹெர்பீஸ் (Herpes) போன்ற ஏனைய பாலியல் நோய் உள்ள வர்களுக்கும், பாலியல் உறுப்புகளில் சிறுகாயங்கள், உரசல்கள் உள்ளவர்க ளுக்கும். பலரோடு உடலுறவு வைப்பவர் களுக்கும் இந்நோய் ஏற்படக்கூடிய நிகழ்தகவு அதிகம். HIV தொற்றியோரு டன் சாதாரணமாக சமூக பழக்கவழக்கங் களில் ஈடுபடுவதனூடாகவோ, கைகுலுக் குதல், தொடுதல், கட்டியணைத்தல், விளையாடுதல், ரயில் மற்றும் பஸ்களில் பயணம் செய்தல், வியர்வை, கண்ணீர், சிறுநீர் மற்றும் முத்தமிடல் மூலமாகவோ, பொதுக்கழிப்பறைகள் மற்றும் படுக்கை, அவர்கள் பயன்படுத்திய உணவுப் பாத்திரங்கள் மூலமாகவோ, நீச்சல் குளம் மற்றும் இருமல், தும்மல், கொசுக்கடி மூலமாகவோ பரவாது. இருப்பினும் பொது இடங்களில் சவரம் செய்து கொள்ளும் ஆண்கள் பொதுக் கத்தி களைப் பயன்படுத்தாமல் புதிய சவர அலகுகளை பயன்படுத்துவதை உறுதி செய்து கொள்ளல் வேண்டும்.

**பாலுறவு நடத்தையில் ஒழுக்கம் தவறினால் ஆபத்து! ஆபத்து!!**

*** உலகில் சுமார் 3 கோடி பேர் பாதிப்பு**
*** ஒரு மணி நேரத்தில் 600 பேர் பாதிப்பு**
*** இலங்கையில் 2016 இல் 47 பேர் இறப்பு**



**எயிட்ஸ் அறிகுறிகள்**

அறிகுறிகள் HIV பாதிப்புக்குள்ளான பலரிடம் ஆரம்பநிலையில் அதற்கான அறிகுறிகள் தெரிவதில்லை. இருந்தபோதி லும் சிலரிடம் இது ஃப்ளு சுரமாக (காய்ச் சல்) வெளிப்படுகிறது. அதுவும் இந்த வைரஸ் மூன்று முதல் ஆறு வாரங் களுக்குப் பிறகே தெரிகிறது. இந்தத் தீவிர HIV பாதிப்பால் ஏற்படும் உடல் நலக் குறைவு, காய்ச்சல், தலைவலி, உடல் சோர்வு, குமட்டல், வியர்வை (குறிப் பாக இரவு நேரங்களில்) நடுக்கம், வயிற்றுப் போக்கு, நெறிகட்டுதல் (அக் குள், கழுத்து) போன்றவற்றைத் தோற்றுவிக்கின் றது. இந்த அறிகுறிகள் HIV தொற்றிய ஒரு சில நாளகளில் தெரிவதில்லை. மேலும் இது, ஆரம்பநிலையில் வேறு ஏதோ ஒரு வைரஸ் என்று தவறாகவே இனங் காணப்படுகிறது. எனவே, ஆரம்ப நிலையில் HIV தொற்றைக் கண்டுபிடிப் பது கடினமாகும்.

தொற்று ஏற்பட்ட முதல் மூன்று மாதங்களில் வைரசின் எண்ணிக்கை கணக்கற்றுப் பெருகி, உடலின் பல பாகங் களிலும் பரவுகின்றன. குறிப்பாக மூட் டுக்களில் உள்ள இழையங்கள் இத னால் பாதிக்கப்படுகின்றன. இந்நிலை யில் அத்தொற்று, பாதிக் கப்பட்டவர்களிட மிருந்து மற்றவர்களுக்கு எளிதாகப் பரவிவிடுகின்றது. உடலில் உள்ள நோய் எதிர்ப்பு கலங்களான வெண் குருதித் துணிக்கை அனைத்தும் ஒன்று திரண்டு போராடத் தொடங்கும் போதுதான் HIV யின் வேகம் சற்று குறைகிறது. HIV தொற்றின் தீவிரமான அறிகுறிகள் தெரிய பல வருடங்கள் ஆகின்றன. பெரியவர் களுக்கு HIV தொற்றிய பிறகு அது வெளித் தெரிவதற்கு 10 வருடங்களுக் கும் மேல் ஆகிறது. HIV தொற்றோடு பிறக்கும் குழந்தைகளுக்கு அது தெரிய இரண்டு வருடங்கள் ஆகின்றன. இவ் வாறு அறிகுறிகள் தெரியாத நிலை மனி தருக்கு மனிதர் மாறுபடும். எய்ட்ஸ் வெளியில் தெரிய ஆரம்பித்த உடன் பாதிக்கப்பட்டவர் அடிக்கடி நோய் வாய்ப் படுவார். உடல் எடை குறைவு, தொடர் காய்ச்சல், வயிற்றுப்போக்கு ஆகியன எய்ட்ஸின் முக்கியமான அறிகுறிகளா கும். மேலும் எய்ட்ஸ் நோயாளிகள், காசநோய், பூஞ்சான் நோய் தொற்று, சில வகைப்புற்று நோய்கள், நிமோனியா போன்ற பல்வேறு நோய்களால் பாதிக் கப்படுகின்றனர்.

**HIV தொற்று வராமல் இருக்க...**

எய்ட்ஸ் பாதுகாப்பு HIV தொற்று வராமல் இருக்க தடுப்பூசிகளோ அதனை குணப்படுத்துவதற்கு மருந்துகளே இல்லை. HIV தொற்று வராமல் இருக்க ஒரே வழி பாதுகாப்பான நடத்தைகளே ஆகும். பிரதானமாக உடலுறவின் மூலம் பரவுவதைத் தடுத்த லுக்கான பூரண முயற்சிகளை மேற்கொள்ளல் வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் பாதுகாப்பான உட லுறவுக்குப் பின்வரும் வழிகாட்டு நெறி கள் உதவும்.

ஒருவருக்கொருவர். உண் மையாக இருத்தல் வேண்டும். பாலு றவு நடத்தைகள் நபருக்கு நபர் வேறுபடுவதால் ஒருவருக்கொருவர் நம்பிக்கை யோடு இருத்தல் அவசியமா னதாகும். இச்சந்தர்ப்பத்தில் ஒருவர் மற்றொரு வரை உண் மையாக இருக்க வலியுறுத்த வேண்டும். மேற்கத்தேய நாடுகளைப் போல எண்ணற்ற நபர்களுடன் உடலுறவு கொள்வதைத் தவிர்த் துக் கொள்ளல் வேண்டும். இதே போல் அடிக்கடி உடலுறவு கொள்வோரை மாற்றுவதையும் இயலும் ான வரை தவிர்த் துக் கொள்ளல் வேண்டும். பிற பாதுகாப்பு முறைகளிலும் அவதானம் செலுத்து தல் வேண்டும். ஒரே முறை பயன்படுத்தக் கூடிய ஊசியை மட்டுமே உபயோகப் படுத்த வேண்டும். அதிலும் குறிப்பாக நரம்புகளில் செலுத் தும் ஊசியைப் பயன்படுத் தும் போது இதை கண்டிப் பாகக் கடைப்பிடிக்க வேண் டும். இது முடியாமல் பலமுறை பயன்படுத்தக் கூடிய ஊசியை ஏற்க வேண் டியிருந்தால் அது நன்கு சுத்தி கரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

கருவுற்ற பெண்கள், தாய் சேய் தொற்றுத் தடுப்பு மையத்தை அணுக வேண்டும். அங்கு பரிசோதனை செய்துகொண்டு HIV இருப்பது கண்டு பிடிக்கப்பட்டால் மருத்துவர்களின் அறிவு ரையைப் பின் பற்றி குழந்தைகளுக்கு இத்தொற்று பரவாமல் இருக்க முயற்சிக்க வேண்டும். இரத்தம் தேவைப்பட்டால் அங்கீகரிக் கப்பட்ட இரத்த வங்கிகளை அணுக வேண்டும். HIV தொற்று இல்லை என்ற சான்றிதழுடன் கூடிய இரத்தத்தைப் பெறுவது அவசியமாகும்.

ஒருவர் பால்வினை நோயைப் பெற்றி ருந்தால், அவர் உடலுறவு கொள்ளும் போது அந்நோய் அதிகரித்து பல்வேறு மாற்றங்களை அடைந்து HIV தொற்றாக மாறிவிடும். எனவே பால்வினை நோய் உள்ளவர்கள் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக தகுந்த சிகிச்சையை மேற்கொண்டு இந்நோயை குணப்படுத்திக் கொள்ளவேண்டும்.

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




**2016 இல் எந்தவொரு குறிப்பிட்ட நாளிலும், சுமார் 16 மில்லியன் தனி நபர்கள் தனியார் துறையில் வேலை செய்யக் கட்டாயப்படுத் தப்பட்டனர். இந்த தொழிலாளர்களில் பாதிக்கும் மேலானோர் உள்நாட்டு, கட்டுமானம் மற்றும் உற்பத்தி துறைகளில் ஈடுபடுகின்றனர். பாதிக்கப்பட்டவர்கள் தப்பியோடுவதற்கோ அல்லது விடுவிக்கப்படுவதற்கோ முன்னர், சராசரியாக 20.5 மாதங்களுக்கு பிடித்து வைக்கப்படுகின்றனர்.**



4.8 மில்லியன் மக்கள் கட்டாயப் படுத்தப்பட்ட பாலியல் சுரண்டலுக்கு ஆளாகியுள்ளனர் என்றும் இந்த ஆய்வு தெரிவிக்கிறது. இந்நிலையில் பாதிக் கப்பட்டவர்கள் தப்பியோடு வதற்கோ அல்லது விடுவிக்கப்படுவதற்கோ முன்னர், சராசரியாக 23.4 மாதங் களுக்கு பிடித்து வைக்கப் படுகின்ற னர். பாதிக்கப்பட்டவர்களில் 20 சதவி கிதத்திற்கும் மேலானவர்கள் பெரும ளவில் பெண்களும், சிறுமிகளும் மற் றும் குழந்தைகளுமாகவே உள்ளனர்.

பிராந்தியவாரியாக பார்த்தால், ஆபி ரிக்காவில்தான் ஒவ்வொரு 1,000 பேருக்கு 7.6 வீதம் என நவீன அடிமைத் தனத்தின் மிக உயர்ந்த விகிதம் உள் ளது. இந்த விகிதம் ஆசியா மற்றும் பசுபிக்கில், ஒவ்வோர் ஆயிரம் பேருக்கு 6.1 வீதம்; ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியாவில் ஒவ்வோர் ஆயிரம் பேருக்கு 3.9 வீதம்; அராபிய நாடுக ளில் ஒவ்வொரு ஆயிரம் பேருக்கு 3.3 வீதம்; அமெரிக்காவில் ஒவ் வொரு ஆயிரம் பேருக்கு 1.9 வீதம் என்று உள் ளது. போரால் சமீபத்தில் சூறையா டப் பட்ட அல்லது அழிந்து போயுள்ள நாடுகள் தான் அதிகளவிலான சுரண் டலை அனுபவிக்கின்றன.

**ILO அதன் வரையறைக்குள், சட்டபூர்வமான வேலை வாய்ப்புகளில் பணிபுரியும் குழந்தை தொழிலாளர்களை உட்படுத்தவில்லை. இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்ட வரை யறை, அபாயகரமான, பல மணி நேரங்களைக் கோரு கின்ற, விளையாடும் மற்றும் படிக்கும் குழந்தைகளை பெரும்பாலும் தடுக்கின்ற, மற்றும் அவர்களது நல் வாழ்வை ஆபத்திற்கு உட்படுத் துகின்ற வேலைகளை உள் ளடக்கியது. இந்த வரை யறையின் மட்டுப்படுத்தப்பட்ட நோக்கம் ஒருபுறம் இருந்தாலும், இந்த ஆய்வு, உலகெங்கிலும் நிலவும் குழந்தை தொழிலாளர் முறையின் அதிர்ச்சியுற வைக் கும் ஒரு வடிவமைப்பை தருகிறது.**

ஆய்வின்படி, குழந்தைத் தொழிலா ள்களாகவுள்ள குழந்தைகளில் (72.5 மில்லியன்) பாதிக்கும் சற்று குறைந் தவர்கள் அவர்களது ஆரோக்கியம், பாதுகாப்பு அல்லது தார்மீக வளர்ச் சியை ஆபத்திற்கு உட்படுத்தும் அபா யகர வேலைகளையே செய்கின் றனர். 5 முதல் 11 வயதிற்கு இடைப் பட்ட 19 மில்லியனுக்கும் மேற்பட்ட குழந்தைகள்; 12 முதல் 14 வயதிற்கு இடைப்பட்ட 16.3 மில்லியனுக்கும் மேற்பட்ட குழந்தைகள்; 15 முதல் 17 வயதிற்கு இடைப்பட்ட 37 மில் லியனுக்கும் மேற்பட்ட குழந்தை கள் என அனைவருமே அபாயகரமான வேலையில் தான் ஈடுபட்டுள்ளனர். இந்தக் குழந்தைகளை வேலை செய்ய கட்டாயப்படுத்தப்படும் மணி நேரங் களோ இன்னும் பயங்கரமானவை.



குழந்தை தொழிலாளர்களில் 15 முதல் 17 வயதுக்கு இடைப்பட்டவர் களில் தோராயமாக 63.3 சதவிகிதத் தினர் ஒரு வாரத்துக்கு 43 அல்லது அதற்கு கூடுதலான மணிநேரங் களுக்கு வேலை செய்யக் கட்டாயப் படுத்தப்படுகின்றனர்.

குழந்தை தொழிலாளர்களில் கிட் டத்தட்ட முக்கால் பங்கினர் கல்விய றிவு பெறமுடியாதவர்களாக உள்ளனர். அதிலும் பள்ளிக்குச் செல்லும் குழந் தைகள் அவர்களது சக பணிபுரியாத குழந்தைகளை விட மிக மோசமாக செயலாற்றும் போக்கையே கொண் டுள்ளனர். வேலை செய்வதற்கென செலவழிக்கப்படும் நேரமும் சக்தி யும், வகுப்பு நேரங்களில் முற்றாகப் பெறப்படும் நன்மைகளையும், வகுப் பறைக்கு வெளியில் பயிலும் நேரத் தைப் பெறுவதற்கான சாத்தியப்பாட் டையும் தடுக்கின்றது.

**நவீன அடிமைத்தனத்தைப் போலவே, மோதல்களினா லும், பேரழிவினாலும் பாதிக்கப்பட்ட நாடுகளில் கணிசமான விகிதத்தில் குழந்தை தொழிலாளர்கள் உள்ளனர். போரால் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஏறக்குறைய 17 சத விகித குழந்தைகள் குழந்தை தொழிலாளர்களாக உள்ளனர். அதாவது கிட்டத்தட்ட உலகளாவிய சராசரியை விட இரு மடங்காகும்.**

ஆப்கானிஸ்தான், மத்திய ஆபிரிக்க குடியரசு, கொலம்பியா, ஈராக், மாலிஇ நைஜீரியா, பிலிப்பைன்ஸ், தெற்கு சூடான், உக்ரேன், யேமன் மற்றும் கொங்கோ ஜனநாயக குடியரசு உள் ளிட்ட ஆயுத மோதல்களில் பாதிக் கப்பட்ட நாடுகள் இந்த அறிக்கையில் உட்படுத்தப்பட்டுள்ளன. மதிப்பீடுகள் கிடைக்கப் பெறாததால் சிரியா மற்றும் லிபியா உள்ளிட்ட மற்ற நாடுகள் அதில் உட்படுத்தப்படவில்லை.

ஆபிரிக்காவில், ஐந்து குழந்தை களுக்கு ஒரு குழந்தை வீதம் குழந்தை தொழிலாளராக இருப்பதானது, ஆசியா



மற்றும் பசுபிக் பிராந்தியத்தை அடுத்து, இந்தப் பிராந்தியத்தை



பெருமளவு குழந்தை தொழிலாளர் கள் கொண்ட பகுதியாக்குகிறது. இருப்பினும், குறைந்த வருமானம் உள்ள பகுதியில் மட்டுமே குழந்தை தொழிலாளர் முறை இருப்பதாக அர்த்தம் இல்லை.

உண்மையில், பாதிக்கப்பட்ட குழந்தைகளில் பாதிக்கும் மேலானோர் குறைந்த நடுத்தர மற்றும் மேல் நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளில் வசிக்கின்றனர் என்பதோடு, 1.3 சத விகிதத்தினர் அதிக வருவாய் கொண்ட நாடுகளில் தான் குழந்தை தொழிலா ளர்களாக உள்ளனர்.

உலகளவில் 2012 இல் இருந்து குழந்தைத் தொழிலாளர் சதவிகிதம் சிறிது வீழ்ச்சியடைந்துள்ள போதி லும், அது உப-சஹாரா ஆபிரிக்காவில் உண்மையில் அதிகரித்துள்ளது.

அடிமைத்தனம் மற்றும் குழந்தை தொழிலாளர் முறை எனும் தொற் றானது முதலாளித்துவ சுரண்டலின் ஓர் அம்சமாகும். கட்டாய தொழிலா ளர் முறை அடிப்படையில் தான் ஒவ் வோர் ஆண்டும் தனியார் துறையில் 150 பில்லியன் டொலர் வரை இலா பங்கள் உருவாக்கப்படுகின்றன என சர்வதேச தொழிலாளர் அமைப்பு (International Labour Organization- ILO) மதிப்பிடுகிறது.



(கேள்வி தொடரும்...)

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. ‘உன்னைச் சரணடைந்தேன்’ என்ற அவரது தொகுப்பில் ‘யாழில் கம்பன்’ பற்றிய தொடர் பதிவு இது.



**நேற்று வியாழக்கிழமை வெளியான 21ஆவது பதிவில் ஆரம்பத்தில் ஓரிரு பந்திகள் தவறவிடப்பட்டுவிட்டன. அந்தப் பகுதி இன்றையதினம் தனியாக கட்டம் கட்டப்பட்டு பிரசுரமாகியுள்ளது.**

# கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 22

# உன்னைச் சரணடைந்தேன்



மற்றொருநாள், அறிஞர்களெல்லாம் சூழ, என் குருநாதர் அமர்ந்திருக்க, நானும் குமாரதாசனும் அவர் பின் அமர்ந்திருந்தோம். அப்போது, பட்சிராஜன் என்கிற வயது முதிர்ந்த பேரறிஞர் ஒருவர், அவ்வித்துக்கு வந்தார். உடனே, எனது குருநாதர் என்னையும் குமாரதாசனையும் பார்த்து, ‘‘சாரிடம் ஆசீர்வாதம் வாங்குங்கடா!’’ என்றார். நாங்கள் ஏற்கனவே அப்பெரியவரைக் கண்ட போது ஆசி பெற்றிருந்தோம். குருநாதர் சொன்னதும் அப்பெரியவர் ‘‘அதெல்லாம் பேஷா ஏற்கனவே ஆயிட்டுது’’ என்றார். என்குருநாதர் விடவில்லை. ‘‘அதனால் என்ன? அந்த பசங்கள இன்னொருதரம் நீங்க ஆசீர்வாதம் பண்ணுங்கோ! அவங்க இன்னும் நல்லா இருக்கட்டும்!’’ என்றார். குருவின் கருணை கண்டு நெகிழ்ந்தேன்.

இச்சம்பவம் குருநாதர் இலங்கை வந்த போது நிகழ்ந்தது. குருநாதர், தனது குருவான கி.வா.ஜ. பற்றி எப்போதும், மேடையில் பெருமையாய் சொல்லுவார். கி.வா.ஜ. அவர்களும் அடிக்கடி யாழ்ப்பாணம் வந்து போகிறவர்கள். முதல்தரமாய் எனது குரு, யாழ்ப்பாணம் வந்து சென்ற பின்பு, வோறொரு பேச்சுக்காக கி.வா.ஜ. யாழ் வந்திருந்தார். அவர் வந்தால் ஒரு பிராமண வீட்டில் தான் தங்குவார். எனது குருவின் குரு என்ற காரணத்தால், வைத்திய நாதனோடு அவரைச் சந்திக்கச் சென்றிருந்தேன். அந்த வீட்டின் கூடத்தில் பலரும் கி.வா.ஜவைச் சூழந்திருந்து பேசிக் கொண்டிருந்தார்கள். என்னை அழைத்துச் சென்ற வைத்தியநாதன், ‘‘உங்கள் மாணவரின் மாணவன் இவன்’’ என்று என்னை அறிமுகப்படுத்தியதோடு நில்லாமல், ‘‘உங்க மாணவர் ரொம்ப அற்புதமாய் பேசினார்’’ என்று, எனது குருநாதரைப் புகழ, கி.வா.ஜ விற்கு அது அவ்வளவாய் பிடிக்கவில்லை. அச்செய்தி காதில் விழாதது போல் அவர் இருந்தார். வைத்திய நாதன் மீண்டும் அதே செய்தியைச் சொல்ல, அதற்கு கி.வா.ஜ. ‘‘ஆமா, ஆமா இராதாகிருஷ்ணனா? அவன் நல்லா கத்துவான். அவனுக்கு ஒரு மாணவன் இருக்கான், சத்திய சீலன்னு பேரு, அவன நான் கத்திய சீலன்னுதான் கூப்பிடுவேன்’’. என்று சிலேடையில் பெயர்பெற்ற அவர் சொல்ல, கூடியிருந்த கூட்டம் சிரித்தது. என்னால் மதிக்கப்பட்ட அப்பெரியவர் அன்று என் மனதிலிருந்து வீழ்ந்தார்.

## நான்காவது கம்பன் விழா 03.05.1981

### வாலி விதைப் படலம்

இப்போதெல்லாம் கம்பன் விழாக்களுக்கான அழைப்பிதழ்களை, மிக ஆடம்பரமாக வெளியிடுகிறோம். ‘‘அழைப்பிதழுக்கு இவ்வளவு செலவு செய்ய வேண்டுமா?’’ என்று, சிலர் அக்கறைபடுமாற்போல் குத்தலாய்க் கேள்வி கேட்பார்கள். ‘‘உலகத்திற்கு ஒன்றுமே பயன் செய்யாத நீங்கள் கூட, உங்கள் திருமண விழாவிற்கு மிகமிக ஆடம்பரமாக அழைப்பிதழ் அடிக்கிறீர்கள். நம் தமிழினத்தை ஆயிரம் ஆண்டுகளாக, பண்பாட்டுப் பாதையில் வழி நடத்தி வருகிற கம்பனுக்கு, இன்னும் அதிகமான செலவிலல்லவா அழைப்பிதழ் அடிக்க வேண்டும்?’’ என்பேன். கேள்வி கேட்டவர் மனதுள் என்னைத் திட்டியபடி பேசாமல் போய் விடுவார்.

இந்த நான்காவது கம்பன் விழாவிற்கு நல்லூரிலிருந்து மிகச்சிறிய திருவள்ளுவர் அச்சகத்தில், மிகச் சாதாரண ‘நியூஸ் பேப்பரில்’ தான் அழைப்பிதழை அடித்தோம். அப்போதெல்லாம் ஈய எழுத்துக்களைத் தனித் தனியாக எடுத்து, அச்சுக்கோர்க்கும் முறையே வழக்கத்திலிருந்தது. குமாரதாசன் மிக நன்றாகப் ‘புரூப்’ பார்ப்பான்.

அக்கறையோடு அவன் பார்த்துக் கொடுத்தும், அச்சுக்கோர்த்தவனின் பிழையால் வதை என்ற சொல்லில் ‘வ’ என்ற எழுத்துக்குப் பதிலாக ‘வி’ என்ற எழுத்து பதிவாகி, அழைப்பிதமும் வெளிவந்துவிட்டது.

வாலி வதைப் படலம், வாலி விதைப் படலமாக..., நாம் பதறிப்போனோம். பின்னர், எல்லா அழைப்பிதழையும் பேனையால்திருத்தி வெளியிட்டோம்.

★ ★ ★

### பிரதமர் பிரேமதாஸாவை விழாவுக்கு அழைத்தோம்

அப்போது இளமை தந்த உற்சாகத்தில் நாங்கள் அடித்த கூத்துக்கள் பல. அக்கூத்துக்களில் ஒன்றைச் சொல்கிறேன். கொழும்பில் கம்பன் விழா ஒன்றை நடத்த வேண்டும் என்பது, அப்போதைய எங்கள் கனவாய் இருந்தது. அதற்கான முயற்சிகளை செய்யத் தொடங்கும் முன்னரே, அந்த விழாவுக்கு, அப்போது நாட்டின் பிரதமராகவிருந்த, பிரேமதாஸாவை அழைக்க வேண்டும் என நினைத்தோம். எங்களுக்கு எந்தச் செல்வாக்குமில்லாத, எந்த செல்வாக்குள்ளவர்களையும் தெரியாத காலமது.

இளமை தந்த அசட்டுதுணிச்சலோ? அல்லது எதையும் பெரிதாய்ச் செய்ய வேண்டுமென்ற, எங்களின் இயல்போ? தெரியவில்லை. யாருடைய சிபாரிசும் இல்லாமல், பிரேமதாஸாவை நாங்களே நேரில் சென்று காண்போம் என முடிவு செய்தோம். நாங்கள் யாழ்ப்பாணத்தில் படித்துக் கொண்டிருந்த காலம் அது.

பிரதமர் வசித்து வந்த அலரிமாளிகையில் அதிகாலையில், மக்களை பிரேமதாஸா சந்திப்பார் எனும் செய்தி அறிந்து, அவரைச் சந்திக்கவென நானும், குமாரதாசனும், மாணிக்கமும், கொழும்பு சென்றோம். ஓர் அதிகாலைப் பொழுதில் அலரிமாளிகை வாசலில், பொது மக்கள் கூட்டம் நிறைந்த ‘கியூ’வில் நாமும் போய் நின்றோம். ‘‘நாங்கள் போய் அழைத்தால் அவர் வருவாரா?’’ என்று சிந்திக்கக் கூட இல்லை. பிரதமரின் செயலாளர் ஒருவர் ‘கியூ’வில் நின்ற ஒவ்வொருவரிடமும், அவர்கள் வந்த நோக்கம் கேட்டு எழுதினார்.

ஆங்கிலமோ, சிங்களமோ சரியாக தெரியாத நிலையிலும், எங்கள் கோரிக்கையை முடிந்தளவு அவரிடம் முன்வைத்தோம். எங்கள் தோற்றத்தையும், கோரிக்கையையும் பார்த்து, அவர் உள்ளே சிரித்திருப்பார் என்பது இப்போது விளங்குகின்றது. எங்கள் கோரிக்கையைஎழுதிவாங்கிக்கொண்டு, பிரதமரிடம் பேசி, பின் முடிவு அறிவிப்பதாக, எங்களை அவர் அனுப்பி வைத்தார். ஆச்சரியம் என்னவென்றால், நாங்கள் யாழ் வந்து சேர்ந்த ஒரு சில நாட்களில் பிரதமர் பிரேமதாஸாவிடமிருந்து எங்கள் விழா வெற்றி பெறுவதற்கான வாழ்த்தும், கலந்து கொள்ள முடியாமைக்கான மன்னிப்பும் தாங்கிக் கடிதம் வந்தது.

விவரமறியாத இளைஞர்களின் கோரிக்கையையும் செவிமடுத்த, பிரேமதாஸாவின் தலைமைத்துவத்தை, இப்போதும் நினைத்து ஆச்சரியப்படுவேன்.

★ ★ ★

### ஈ. சண்முகம் முதலாளி

பிரேமதாஸாவைச் சந்தித்த பிறகு, எங்கள் கோரிக்கையை, செயலாளர் எழுதி வாங்கியபடியால், ஒருவேளை அவர் எங்கள் கொழும்பு விழாவில், கலந்துகொள்வார் என நினைத்தோம்.

அவர் சம்மதித்து விட்டால் விழாவை எப்படி நடத்துவது? விழாவினை நடத்தப் பணம் வேண்டுமே? யாரிடம் கேட்பது? கேள்விகள் எழ, அப்போது கொழும்பில் மிகப் பிரபலமாக இருந்த, ‘மாணிக்கம் பிறதர்ஸ்’ உரிமையாளர், சண்முகம் முதலாளியைச் சந்திப்பதாய் முடிவு செய்தோம்.

சுருவிலைச் சேர்ந்த அவர், எங்கள் நண்பன் மாணிக்கவாசகரின் உறவினர். மாணிக்கவாசகரின் அண்ணன் கந்தசாமி, அவர்களின் கடையில்தான் அப்போது வேலை செய்து கொண்டிருந்தார். முதல் வருஷத்தில் சுருவில் கோயிலில் நான் பேசியதைக் கேட்டு, எனக்கு மாலை போட்டு, சண்முகம் முதலாளி மரியாதை செய்திருந்தார்.

இந்த இரண்டு தொடர்பையும் வைத்து, அவர்களது கடை அலுவலகத்தில் அவரை சந்திக்கலாம் எனப் போனோம். முதலாளியைக் கண்டதும், மாணிக்கமும், கந்தசாமியும் சற்றுப் பயந்து போனார்கள். உள்ளே கூப்பிட்டதும், குமாரதாசன் உள்ளிட்ட நால்வரும் உள் நுழைந்தோம். அவர் எங்களைத் தெரிந்து வரவேற்பார் என நாம் நினைக்க, அவரோ எங்களை இருக்கக்கூடச் சொல்லாமல், வேண்டுமென்றே நீண்ட நேரம் நிற்க வைத்து வந்த கடிதங்களை பார்த்துக் கொண்டிருந்தார். பின் மெல்ல முகத்தை நிமிர்த்தி ‘‘என்ன வேண்டும்?’’ என்றார்.

எங்களைத் தெரிந்ததாகவே அவர் காட்டிக்கொள்ளவில்லை. பிரேமதாஸாவின் பெயரைச் சொன்னால், கொஞ்சம் அசைவார் என நினைத்து, ‘‘கொழும்பில் ஒரு கம்பன் விழாச் செய்ய இருக்கிறோம். அதற்குப் பிரதமர் பிரேமதாஸாவைக் கூப்பிட்டிருக்கிறோம். அந்த விழாவிற்கு நீங்கள் தான் ‘ஸ்பொன்ஸர்’ செய்ய வேண்டும்’’ எனத் துணிந்து கேட்டேன். ஒரு மாதிரியாய் எங்களைப் பார்த்த அவர் பின்னர், ‘‘அவர் வருவது உறுதியா?’’ என்றார். இவருக்கு எங்கே பிரதமரைத் தெரியப் போகிறது என நினைத்து, ‘‘வருவதாய் சொல்லி இருக்கிறார்’’ என்றேன்.

‘‘பிரதமர் வருவது நிச்சயமானால் வாருங்கள், காசு தருகிறேன்’’ என்று, வெறுங்கையோடு எம்மைத் திருப்பி அனுப்பினார். பின்னாளில் ஒருமுறை பிரேமதாஸா யாழ்ப்பாணம் வந்த போது, வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டம் நடந்தது. கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது சண்முகம் முதலாளி வர, அவரைக் கண்டு பிரேமதாஸா மேடையால் இறங்கி வந்து, அவரை வரவேற்றார். அப்போதுதான் அவர்களிடையேயான நெருக்கம் தெரிய வந்தது. ‘ஷ...’ வெட்கினோம். சண்முகம் முதலாளியும் சகோதரரும், பின்னர் சுட்டுக்கொலை செய்யப்பட்டதும், அக்கொலையோடு பிரேமதாஸாவின் பெயர் இணைத்து பேசப்பட்டதும் அனைவரும் அறிந்த செய்திகளே.

(தொடரும்...)

காலைக்கதிர்
Kalaikkathir



# அரச ஊழியருக்கு வெளிக்கள செயல்முறைப் பயிற்சி முகாம்





மன்னார்மாவட்டத்திலுள்ள அனைத்து அரச ஊழியர்களும் எதிர்காலத்தில் இங்குள்ளசமூகத்துக்குசிறந்தஅனைத்து சேவைகளையும் செய்யக்கூடிய நல்ல உத்தியோகத்தர் ஊழியர்களாக திகழ வேண்டும் என்ற நோக்குடன் வெளிக்கள செயல்முறை பயிற்சிகள் வழங்குவதற்கான நடவடிக்கையை மன்னார் மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான எம்.வை.எஸ்.தேசப்பிரிய மேற்கொண்டுள்ளார்.

இச் செயல்முறைப் பயிற்சிகளை வழங்குவதற்காக மன்னார் மாவட்டத்திலே குருவில வான் காட்டுப் பகுதியைத் தெரிவு செய்தே இப் பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன. இதன் பிரதான வளவாளராக ரி.என்.நியூட்டன், உபாலி பண்டார, இந்திரி, இணைவளவாளர்களாக நவயுகா, றஞ்சினி ஆகியோர்களைக் கொண்டு மன்னார் மாவட்டத்திலுள்ள அரச திணைக் களத்தைச் சார்ந்தவர்களுக்கு வெளிக்கள செயல் முறைப் பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த பயிற்சி முகாமில் முழுமையாக செயற்படுத்தப்பட்டு வரும் விடயங்கள் அரச ஊழியர்களின் தலைமைத்துவப் பயிற்சி, முகாமைத்துவம், உட்கட்டமைப்பு, நம்பிக்கையைக் கட்டியெழுப்புவது, தன் நம்பிக்கை, தொடர்பாடல் திறன்கள், அவதானிப்புத் திறன்கள், திட்டமிடல், கண்காணிப்பு ஆகிய இவற்றினூடாக அரசாங்கத்தினுடைய ஊழியர்கள் எதிர்காலத்தில் சமூக மட்டத்துக்குச் சென்று செயற்படுத்தக் கூடிய விதமாக குறிப்பாக மேற்கூறிய செயல்பாட்டில் திறம்பட செயற்படவேண்டும் என்று சக்தி மயப்படுத்தும் நோக்குடனே இப் பயிற்சி முகாம் யுஎன்டிபி நிதியுதவியுடன் அச்சய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினூடாக நடத்தப்பட்டு வருகின்றது. (இ







நாவாந்துறை சென்.மேரிஸ் ஆலயத்தில் கியுடெக் கரித்தாஸ் சர்வமத சகவாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தில் மறைஆசிரியர், மாணவர்களுடன் மகிழ்வூட்டும் மறைக்கல்வி கற்றலை தூண்டும் வகையிலும் சமய விழுமியங்களை சமூகத்திற்கு விழிப்பூட்டும் சுலோகங்களுடன் மாணவர்கள் பவனியும் காட்சிப்படுத்தலையும் காண்கிறீர்கள்.

(இ)





வட மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனால் மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

மிகவும் வறுமைக் கோட்டிற்குள் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்ட ஏழு மாண வர்களுக்கே சைக்கிள்கள் வழங்கப்பட்டன. வட மாகாண கல்வித் திணைக்கள வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இந் நிகழ்வு இடம்பெற்றது.

(இ



## யாழ் நாகவிகார மண்டபத்தில் நடைபெற்ற பாராட்டு விழா

மௌலவி ஏ.எம்.ஏ அசீஸுக்கு சமாதான நீதவான் பட்டம் வழங்கி கௌரவித்தமைக்காக சர்வ மதத் தலைவரகள் ஒன்று கூடி அவருக்கு பொன்னாடை போர்த்திமாலை அணிவித்தது சமய சமூக தலைவர்கள் பாராட்டினர். (இ)

# ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானம் இலங்கை முழுமையாக நிறைவேற்ற வேண்டும்



## பிரித்தானியா வலியுறுத்தல்

கொழும்பு, டிசெ. 01

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசு முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்று பிரித்தானியா வலியுறுத்தியுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த பயணத்தின்போது, இந்த விவகாரத்தை தாம் எழுப்பியதாக, ஆசிய-பசுபிக் விவகாரங்களுக்கான பிரித்தானியாவின் இராஜாங்க அமைச்சர் மார்க் பீல்ட் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த ஒக்ரோபர் மாத தொடக்கத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்புக்கு, மேற் கொண்டிருந்த பயணத்தின் போது, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 34/1 தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டியது முக்கியமானது என்று இலங்கை வெளி விவகார அமைச்சர் திலக் மாரப்பனவிடம் எடுத்துக் கூறியிருந்தேன்.

இராணுவத்தினர் வசமுள்ள அனைத்து தனியார் காணிகளையும் விடுவித்தல், காணாமல் போனோர் பணியகத்தை செயற்படுத்தல், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குதல் உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கியதாக அந்த வாக்குறுதிகள் அமைந்திருந்தன.

34/1 தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கும், இலங்கையில் நல்லிணக்கம், மனித உரிமைகளை ஊக்குவிப்பதற்கான முயற்சிகளுக்கும் பிரித்தானியா தொடர்ந்து உதவும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கடற்படை தளபதியுடன் பிரதமர் ரணில் சந்திப்பு



கொழும்பு, டிசெ. 01

இலங்கை கடற்படையின் 22 ஆவது தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள வைஸ் அட் மிரல் சிரிமேவன் ரணசிங்க மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது பிரதமர் கடற்படை தளபதிக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்ததார். இருவருக்குமிடையில் சுமுகமான கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

சிரிமேவன் ரணசிங்க கடற்படை தளபதியாக நியமிக்கப்பட்டமையைத் தொடர்ந்து பிரதமரைச் சந்திக்கும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். இதே வேளை, இந்தச் சந்திப்பை நினைவு கூறும் வகையில் கடற்படைத் தளபதியால் பிரதமருக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.











### உலக எச்.ஐ.வி. தினத்தை முன்னிட்டு

# யாழ் நகரில் நேற்று விழிப்புணர்வு நடைபவனி

யாழ்ப்பாணம், டிசெ. 01

உலக எச்.ஐ.வி. தினத்தை முன்னிட்டு மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் நடைபவனி ஒன்று இடம்பெற்றது.

எயிட்ஸைத் தடுப்போம் மாறுபட்ட உலகத்தைப் படைப்போம் என்னும் கருப் பொருளில் இந்த விழிப்புணர்வு ஊர்வலம் இடம்பெற்றது.

யாழ். போதான வைத்தியசாலையில் இருந்து ஆரம்பித்த நடைபவனியானது வேம்படி சந்தியை அடைந்து அங்கிருந்து ஸ்ரான்லி வீதியூடாக சென்று மீண்டும் சத்திரசந்தியை சென்றடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் முடிவடைந்தது.

நடைபவனியின் நிறைவில் யாழ் தாதியர் பயிற்சி கல்லூரியில் இடம்பெற்ற கூட்டத்தில் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி கலந்து கொண்டு உரையாற்றினார்.

இதன்போது அவர் தெரிவித்தவை வருமாறு:-

மக்கள் தமது சுக நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதனை விட்டு தமது உடல் நலத்தில் கவனமின்றி பல்வேறு வியாதிகளுடன் வருகின்றவர்களையும் வைத்திய சாலை முகங்கொடுக்க நேரிடுகின்றது.

எனவே, பொதுமக்கள் ஒவ்வொருவரும் சுகதேசியாக வாழவேண்டும் என்பதை தெரிந்து கொண்டு வாழ வேண்டும். அவ்வாறே அவர்களுக்கான உரிமைகளை அதிகாரிகள், சுகாதார அதிகாரிகள், வைத்தியர்கள் என அனைவரும் அவர்களுக்கு வழங்க தவறக்கூடாது.

வைத்தியசாலைகளில் பற்றாக்குறைகள் இருக்கின்ற போதும் எம்மாலான சிறந்த சேவையை வழங்கி வருகின்றோம். ஆனால், அதையும் தாண்டி தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் சிகிச்சை பலனின்றி சிலர் இறக்கக்கூடும்.

மக்கள் அதனை சரியான வகையில் புரிந்து கொள்ளாமல் தவறாக கவனவீன குறைவால் உயிரிழப்பு நேர்ந்துள்ளது எனக் கூறுவது தவறு எனவும் பணிப்பாளர் சத்திமூர்த்தி தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த நிகழ்வில் யாழ். போதனா வைத்திய சாலையின் உதவிப்பணிப்பாளர் பவானந்தராஜா, பால்வினை தொற்று நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்பு பிரிவின் வைத்திய நிபுணர் பிரியந்த பட்டேகெல, தாதியர்கள், தாதிய பயிலுநர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# மலையகம் எங்கும் மழை; போக்குவரத்துப் பாதிப்பு



மலையத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக நூறிற்கு மேற்பட்ட வீடுகளில் வெள்ளநீர் புகுந்துள்ளது. இதனால், 300 குடும்பங்கள் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை முதல் மலையகத்தின் பல பிரதேசங்களில் கடும் மழை பெய்து வருகிறது.

இதனால், கெசல்கமுவ ஓயா பெருக்கெடுத்ததில் நோர்வூட் பகுதியில் 100 இற்கும் மேற்பட்ட வீடுகளில் வெள்ளநீர் புகுந்துள்ளதில் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயத்திலும், சிங்கள மகா வித்தியாலயத்திலும் பாதிக்கப்பட்ட மக்களை தங்கவைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் நோர்வூட் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பொகவந்தலாவ பொலிஸ் பிரிவுக்குட் பட்ட கொட்டியாகல செல்வகந்த, ஆரியபுர, பொகவான, குயினா ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை 6 மணி முதல் இரவு 9.00 மணி வரை வீசிய கடும் காற்றால் 200 இற்கும் மேற்பட்ட வீடுகளின் கூரைகள் சேதமடைந்துள்ளன.

சில வீடுகளின் கூரைகளில் போடப்பட்டிருந்த தகரங்கள் பல மீற்றர் தூரத்திற்கு வீசி எறியப்பட்டுள்ளன. மலையகத்தின் பல பகுதியில் மரங்கள் முறிந்து வீழ்ந்ததன் காரணமாக நேற்றுமுன்தினம் இரவு முதல் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதுடன் பல வீதிகளின் போக்குவரத்தும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

அத்துடன் சீரற்ற காலநிலை காரணமாக நேற்றும், இன்றும் மத்திய மாகாண பாடசாலைகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது.

இதனால், நேற்றுக் காலை சில மாணவர்கள் பாடசாலைக்குச்சென்று மீண்டும் வீடு திரும்பினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக பல பகுதிகளில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதுடன் பொது போக்குவரத்தும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

மலையத்தில் நீரேந்தும் பிரதேசங்களில் அதிக மழை வீழ்ச்சி காரணமாக நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் மிக வெகுவாக உயர்ந்து வருகின்றன. இதனால் மேல் கொத்மலை நீர்தேக்கத்தின் நான்கு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதனால், மகாவலி கங் கைக்கு அருகில் வசிக்கும் மக்களை மிக அவதானமாக இருக்குமாறு இடர்முகாமைத்துவ நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது. இதேவேளை, பொகவந்தலாவ டின்சின் பகுதியில் மரக்கறி தோட்ட காவலாளி ஒருவர் வெள்ள நீரில் சிக்குண்டு இருக்கிறார் என அறிவித்ததையடுத்து அங்கு பொகவந்தலாவ பொலிஸார் அவரை காப்பாற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (க)

# ஆர்.கே.நகரில் எங்களுக்கும் தி.மு.கவுக்கும் தான் போட்டி

## சசிகலாவை சந்தித்த டி.டி.வி. தினகரன் பேட்டி

பெங்களூர் சிறையில் இருக்கும் சசிகலாவைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய டி.டி.வி. தின கரன் ஆர்.கே.நகரில் எங்களுக்கும், தி.மு.கவுக்கும்தான் போட்டி என்று தெரிவித்துள்ளார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் சசிகலாவை டி.டி.வி. தினகரன் நேற்று முன்தினம் நேரில் சென்று சந்தித்தார். சசிகலாவை சந்தித்த பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்து அவர் பேசியவை வருமாறு:-

ஆர்.கே.நகரில் எங்களுக்கும், தி.மு.கவுக்கும் தான் போட்டி, நிச்சயம் நாங்கள் வெற்றி பெறுவோம். இரட்டை இலையை எதிர்த்துச் சிலர் வெற்றி பெற்ற வரலாறுகள் உண்டு. சின்னம் யாரிடம் உள்ளது என்பது முக்கியம் இல்லை. இரட்டை இலை எம்.ஜி.ஆர். உருவாக்கிய சின்னம், அம்மா கட்டிக் காத்த சின்னம். இப்போது அது துரோகிகளின் கைகளில் உள்ளது. எனவே, அதை மக்கள் கண்டிப்பாகப் புறம் தள்ளுவார்கள். ஆர்.கே. நகர் பொதுமக்கள் அதற்கு நியாயம் வழங்குவார்கள். 30 ஆண்டுகளாக அம்மாவுடன் இருந்த சசிகலா தலைமையிலான எங்கள் அணிக்கு தான் மக்கள் வாக்களிப்பார்கள்.

இரட்டை இலையை மீட்டெடுப்பதற்காகவே, அதை எதிர்த்துப் போட்டியிடும் சூழ்நிலையைத் துரோகிகள் உருவாக்கியுள்ளனர். இத்தேர்தலில் வெற்றி பெறுவதன் மூலம் தொடர்ந்து வரும்



காலத்தில் இரட்டை இலையை மீட்டெடுப்போம். ஆர்.கே.நகர் இடைத் தேர்தல் வேட்பாளர் தொடர்பாக விரைவில் அறிவிக்கப்படும். சசிகலாவிடம் ஆசீர்வாதம் பெறுவதற்காக இங்கு வந்தோம்.

மூன்று மாநிலங்களவை எம்.பிக்கள் எங்களிடமிருந்து சென்றுள்ளனர். அவர்கள் பதவி பறிபோய்விடும் என்னும் பயத்தில் என்னிடம் கூறிவிட்டே சென்றனர். உதயகுமார் மற்றும் செங்குட்டுவன் இருவரும் அங்கிருந்து எங்களிடம் வந்தவர்கள். இப்போது மறுபடியும் அங்கு சென்றுவிட்டனர். பிரதிபலனை எதிர்பார்ப்பவர்கள் தான் இவ்வாறு செல்வார்கள். 99 வீதத் தொண்டர்கள் சசிகலாவிடம் தான் உள்ளனர்.

மக்கள் விரும்பாத ஆட்சி தற்போது நடைபெற்று வருகிறது. ஆர்.கே.நகரில் அது பிரதிபலிக்கும். தொப்பிச் சின்னத்தைத் தேர்தல் ஆணையத்திடம் கேட்டுப் பெறுவோம். வாக்கெடுப்பின் போது தான் மறைமுக ஆதரவாளர்கள் பற்றி அனைவருக்கும் தெரிய வரும். இரட்டை இலையைக் கொண்டாட அவர்கள் தகுதி இல்லாதவர்கள் என்பது ஆர்.கே.நகர் தேர்தலுக்கு பின் தெரியவரும் என்று தெரிவித்துள்ளார்.

## இரட்டை இலை விவகாரம்:

# புதுடில்லி உயர் நீதிமன்றில் தினகரன் மேன்முறையீடு

புதுடில்லி, டிெ.01

இரட்டை இலை சின்ன விவகாரம் தொடர்பாக தேர்தல் ஆணையத்தின் உத்தரவை எதிர்த்து டில்லி உயர் நீதிமன்றத்தில் டி.டி.வி. தினகரன் தரப்பினர் மேல்முறையீடு செய்துள்ளனர்.

ஜெயலலிதா மரணத்துக்குப் பிறகு அ.தி.மு.க. சசிகலா அணி என்றும் ஓ.பி.எஸ். அணி என்றும் இரண்டாகப் பிளவுபட்டது.

கடந்த மார்ச் மாதம் ஆர்.கே.நகர் தொகுதிக்கு தேர்தல் அறிவிக்கப்பட்ட போது இரு அணியினரும் அ.தி.மு.கவின் இரட்டை இலை சின்னத்துக்கு உரிமை கொண்டாடினார்கள். இதனால் இரட்டை இலை சின்னத்தை முடக்கி தேர்தல் ஆணையகம் நடவடிக்கை எடுத்தது.

இந்த நிலையில் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அணியும் ஓ.பி.எஸ். அணியும் இணைந்தன. இதனால் இரட்டை இலைசின்னத்துக்கு உரிமை கோரும் போட்டி எடப்பாடி – ஓ.பி.எஸ். அணிக்கும் டி.டி.வி.தினகரன் அணிக்கும் இடையில் மாறியது.

இரு தரப்பினரும் தலைமைத் தேர்தல் ஆணையத்தில் தங்களுக்குச் சாதகமான ஆவணங்களைத் தாக்கல் செய்தனர். அந்த ஆவணங்கள் மீது தேர்தல் ஆணைய அதிகாரிகள் 7 கட்ட விசாரணை நடத்தினார்கள். இருதரப்புப்பத்தரணிகளும்





இரட்டை இலை தங்களுக்கே ஒதுக்கப்பட வேண்டும் என்று வாதாடினார்கள்.

இந்த நிலையில் கடந்த 24ஆம் திகதி இந்த வழக்கில் தேர்தல் ஆணையக அதிகாரிகள் உத்தரவை வெளியிட்டனர். எடப்பாடி பழனிச்சாமி – ஓ.பன்னீர்செல்வம் அணிக்கு இரட்டை இலை சின்னத்தை ஒதுக்கீடு செய்து அறிவித்தனர்.

நாடாளுமன்றம், சட்டசபை மற்றும் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர்களில் பெரும்பாலானவர்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு இந்தத் தீர்ப்பு வழங்கப்படுகின்றது என அதிகாரிகள் விளக்கம் அளித்தனர். இந்தத் தீர்ப்பை ஏற்க மறுத்துள்ள டி.டி.வி.தினகரன் அணியினர் தீர்ப்பை எதிர்த்து நீதிமன்றம் செல்லப்போகின்றோம் என அறிவித்தனர்.

அதன்படி நேற்று முன்தினம் தேர்தல் ஆணையத்தின் உத்தரவை எதிர்த்து டி.டி.வி.தினகரன் தரப்பினர் டில்லி உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர். இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக உச்ச நீதிமன்றத்தில் இரட்டை இலை சின்னம் தொடர்பாக எந்த உத்தரவு பிறப்பிக்க இருந்தாலும் தங்கள் கருத்தைக் கேட்காமல் வெளியிடக் கூடாது என்று ஓ.பி.எஸ். தரப்பினர் ஏற்கனவே கேவியட் மனு தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரூபா – கமல் திடீர் சந்திப்பு

புதுடில்லி, டிசெ.01

பெங்களூர் சிறையில் சசிகலாவின் சொகுசு வசதிகளை அம்பலப்படுத்திய டி.ஐ.ஜி. ரூபா, நடிகர் கமலஹாசனைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

சசிகலா, சொத்து குவிப்பு வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டு பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டு இருக்கிறார். அவருக்குச் சிறையில் சிறப்பு வசதிகள் செய்து கொடுக்க 2 கோடி ரூபா லஞ்சம் வாங்கப்பட்டுள்ளது எனச் சிறைத்துறை டி.ஜி.பியாக இருந்த சத்திய நாராயணராவ் மீது சிறைத்துறை டி.ஐ.ஜியாக இருந்த ரூபா குற்றஞ் சாட்டினார். சிறையில் சசிகலா சுதந்திரமாக நடமாடுகிறார் என்றும் கைதி உடை அணியவில்லை என்றும் சமையல் செய்து சாப்பிட அறை ஒதுக்கிக் கொடுத்துள்ளதையும் அம்பலப்படுத்தினார். இச்சம்பவம் தமிழகத்திலும் கர்நாடகாவிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இது தொடர்பாக விசாரிக்கக் குழு அமைக்கப்பட்டது, ரூபா வேறு இடத்திற்குப் பணியிட மாற்றம் செய்யப்பட்டார். இந்த நிலையில் பெங்களூர் சிறையில் மோசடியை வெளிப்படுத்திய ரூபா, நடிகர் கமலஹாசனைச் சந்தித்துப் பேசினார்.

இருவரும் சந்தித்துக் கொண்ட புகைப்படத்தை டுவிட்டரில் வெளியிட்டுள்ள ரூபா, ஒருவரை நான் சந்திப்பதாலோ அல்லது அவருடன் புகைப்படம் எடுத்துக் கொள்வதாலோ நான் அவருடைய கொள்கைகளையும், செயற்பாடுகளையும் ஏற்றுக் கொள்கின்றேன் என ஆகிவிடாது. மேலும் இது எனது பணியில் ஒரு போதும் தாக்கத்தையும் ஏற்படுத்தாது. ஒருவர் பல தரப்பினரையும் சந்தித்துப் பேசுவதால் அவர் தனது சுயதன்மையை இழந்துவிடுவது இல்லை எனக் கூறியுள்ளார்.



## குமரி கடலில் உருவானது 'ஒகி' புயல்

குமரி கடல் பகுதியில் நிலை கொண்டுள்ள காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் புயலாக மாறியுள்ளது எனச் சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

தென்மேற்கு வங்கக் கடலில் இலங்கை அருகே 2 நாள்களுக்கு முன் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதி உருவானது. இதன் காரணமாக கடலோர மாவட்டங்களில் பரவலாக மழை பெய்தது. குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி தீவிரம் அடைந்து தெற்கு மற்றும் தென் கிழக்கு திசையில் குமரி கடல் பகுதி நோக்கி நகர்ந்தது.

அது மேலும் தீவிரம் அடைந்து காற்றழுத்த மண்டலமாகி தற்போது புயலாக உருவெடுத்துள்ளது. குமரியில் இருந்து 60 கிலோ மீற்றர் தூரத்தில் நிலைகொண்டுள்ள இந்தப் புயலுக்கு 'ஒகி' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த புயலால் மணிக்கு 65 முதல் 80 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இந்த புயல் வடமேற்கு திசையை நோக்கி நகர்ந்து லட்சத்தீவு பகுதியைச் நோக்கிச் செல்லும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆர்.கே. நகர் இடைத் தேர்தல்:

# அ.தி.மு.கவின் வேட்பாளராக ஓ.பி.எஸ்.அணி மதுசூதனன்



சென்னையில் நடந்த அ.தி.மு.க. ஆட்சி மன்றக் கூட்டத்தில் மதுசூதனன் ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக அ.தி.மு.கவில் மதுசூதனன், பாலகங்கா உள்ளிட்ட 27 பேர் ஆர். கே. நகர் இடைத்தேர்தலில் போட்டியிட அ.தி.மு.க. தலைமைக்கு விருப்பமனு விண்ணப்பித்திருந்தனர்.

இந்த நிலையில் யார் வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்படுவார் என எதிர்பார்க்கப்பட்ட சூழலில் ஓ.பி.எஸ். அணியில் இருந்த மதுசூதனன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அ.தி.மு.கவின் அமைப்புச் செயலாளர், தலைமை நிலையச் செயலர் உள்ளிட்ட பதவிகளில் வகித்தவர் மதுசூதனன். அ.தி.மு.க. இரு அணியாக இருந்தபோது, ஓ.பி.எஸ். தலைமையிலான அணியில் இருந்தார். 5 ஆண்டுகளில் 2ஆவது முறையாகவும் அ.தி.மு.க அவைத் தலைவராக இருந்துள்ளார்.

இதையடுத்து அ.தி.மு.கவின் மதுசூதனன், தி.மு.கவின் மருது கணேஷ், டி.டி.வி. தினகரன் இடையே கடும் போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அமெரிக்காவை இலக்கு வைத்து வடகொரியா ஏவுகணைச் சோதனை



சியோல்,டிசெ.01

பல நாடுகள் பொருளாதாரத் தடை விதித்துள்ள நிலையில் வடகொரியா, அமெரிக்காவை குறி வைத்து மீண்டும் ஏவுகணை சோதனை நடத்தி யிருப்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்யுள்ளது.

சமீபத்தில் கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்து சென்று தாக்கும் திறன் படைத்த ஏவுகணை சோத னையை வடகொரியா நடத்தியது. அதைத் தொடர்ந்து வடகொரியாவுக்கு அமெரிக்கா பொரு ளாதாரத் தடை விதித்தது. இதனால் இரு நாடுகளுக் கும் இடையே பிரச்சினை வெடித்தது.

இதைத்தொடர்ந்து அமைதியாக இருந்த வட கொரியா 2 மாதங்களுக்கு பிறகு நேற்று மீண்டும் ஏவுகணைச்சோதனை நடத்தியது. இது ஜப்பானின் கடல் பகுதியில் விழுந்தது.

இது 13 ஆயிரம் கிலோமீற்றர் தூரம் சென்று தாக்கும் திறன் கொண்டது. ஆனால், இன்று ஆயி ரம் கிலோ மீற்றர் தூரம் மட்டுமே பறந்து சென்று தாக்கியுள்ளது என தெரிவித்துள்ளது.

இதற்கிடையே இந்த ஏவுகணைச் சோதனை வெற்றிகரமாக நடந்துள்ளது. இதற்கு ஹவாசங்-15 எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதை வட கொரிய அதிபர் கிம் ஜாங்-யங் அதிகாரபூர்வமாக அறிவிக் காமல் நடத்தியுள்ளார்.

கண்டம் விட்டு கண்டம் பாயும் இந்த ஏவுகணை அமெரிக்கா முழுவதையும் தாக்கி அழிக்கும் வகை யில் தயாரிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப் படுகிறது.

# போர் மூளும் சூழ்நிலை ஏற்பட்டால் வடகொரியாவை அழித்து விடுவோம்!

## எச்சரிக்கும் அமெரிக்கா



வொஷிங்டன்,டிசெ.01

பதற்றமான சூழ்நிலையில், போர் மூளும் சூழ்நிலை ஏற்பட்டால் வட கொரியாவை முழுமையாக அழித்து விடுவோம் என அமெரிக்க அதிகாரி கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வடகொரியா தொடர்ந்து ஏவுக ணைகள் மற்றும் அணு ஆயுத சோத னைகள் நடத்தி வருகிறது. இதற்கு அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளும், ஐ.நாவும் கண்டனம் தெரிவித்துள்ளன.

சமீபத்தில் கண்டம் விட்டுக் கண் டம் பாய்ந்து சென்று தாக்கும் திறன் படைத்த ஏவுகணை சோதனையை நடத்தியது.அதைத் தொடர்ந்து வட கொரியாவுக்கு அமெரிக்கா பொருளா தாரத் தடை விதித்தது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே பிரச் சினை வெடித்தது.

அதைத்தொடர்ந்து அமைதியாக இருந்த வடகொரியா, 2 மாதங்களுக்கு பிறகு நேற்று மீண்டும் ஏவுகணைச் சோதனை நடத்தியது. இது ஜப்பானின் கடல் பொருளாதார மண்டலப் பகுதிக் கடலில் விழுந்தது. இத்தகவலை தென் கொரியா தெரிவித்தது. அதை அமெரிக்காவின் இராணுவத் தலைமை யகமான பென்டகன் உறுதி செய்தது.

இந்த நிலையில், ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதர் நிக்கி ஹலே கூறு கையில், அனைத்து நாடுகளும் வட கொரியாவுடனான வர்த்தகம் உள் ளிட்ட அனைத்துத் தொடர்புகளை யும் துண்டிக்க வேண்டும். பதற்ற மான சூழ்நிலையில் போர் மூண்டால் வட கொரியாவை முழுவதும் அழித்து விடுவோம் என எச்சரிக்கை விடுத்துள் ளமையால் பதற்றம் ஏற்பட்டுள்ளது.



## இந்தோனேசியாவில் கனமழை; நிலச்சரிவில் சிக்கி 19 பேர் சாவு!



ஜகார்த்தா,டிெ.01

இந்தோனேசியாவின் ஜாவா தீவுகளில் கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 19 பேர் உயிரிழந்துள்ளனர் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தோனேசியா நாட்டின் ஜாவா தீவுப்பகுதியில் கடந்த சில நாள்களாகப் பலத்த மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக நகரெங்கும் வீதி களில் வெள்ளம் ஆறாக ஓடுகிறது. பல்வேறு இடங்களில் குடியிருப்புப் பகுதிகள் மீது மண் சரிந்து விபத்து ஏற்பட்டதில் 19 பேர் பலியாகியுள்ளனர் எனப்பேரிடர்மையம்தெரிவித்துள்ளது.

கனமழை காரணமாக ஜாவா தீவில் உள்ள இரண்டு விமான நிலை யங்கள் மூடப்பட்டுள்ளன. இதனால் விமானப் போக்குவரத்து முற்றிலும் முடங்கியுள்ளது. ஏற்கனவே, பாலி தீவில் எரிமலை வெடித்ததன் காரண மாக விமான சேவை தடைப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

## லஷ்கர் இ தெய்பாவின் தீவிர ஆதரவாளன் நான்

### முன்னாள் அதிபர் முஷாரப் பேட்டி



எல்லையோரத்தில் இந் தியப் படைகளுக்கு அச் சுறுத்தலாக இருக்கும் லஷ் கர் இ தொய்பா தீவிரவாத இயக்கத்தின் தீவிர ஆதர வாளர் நான் எனப் பாகிஸ் தான் முன்னாள் அதிபர் முஷாரப்தெரிவித்துள்ளார்.

மும்பைத்தொடர்குண்டு வெடிப்பு தாக்குதலில் மூளையாக செயற்பட்ட ஹபிஸ் சயீத் வீட்டுச்சிறை யில் இருந்து சமீபத்தில் விடுவிக்கப்பட்டான்.

இந்தநிலையில், டுபாய் நாட்டில் அரசியல் தஞ்சம் அடைந்துள்ள பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப் பிரபலசெய்திநிறுவனம்ஒன் றுக் குப் பேட்டியளித்துள் ளார். ஹபிஸ் சயீத் தொடர் பான செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த முஷாரப் நான் லஷ்கர் இ தொய்பாவின்தீவிரஆதரவா ளர்என்றுதெரிவித்துள்ளார்.

காஷ்மீர் விவகாரத்தில் லஷ்கர் இதொய்பா அமைப் பினரின் தலையீடு உள் ளது. அது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையி லான பிரச்சினை. ஜம்மு – காஷ்மீரில் இந்தியப் படை களுக்கு சவால்விடும்வகை யில் செயற்பட்டுவரும் லஷ்கர் இதொய்பா அமைப் பையும், அதன் கிளை அமைப்பான ஜமாத் உத் தாவா அமைப்பையும், அதன் தலைவர் ஹபிஸ் சயீதையும் நான் பலமாக ஆதரிக்கிறேன். இதேபோல், அவர்களும்என்னைவிரும் புகிறார்கள் என்பது எனக்கு தெரியும் என அவர் குறிப் பிட்டுள்ளார்.

# குழந்தை பெற விரும்பும் பெண் ரோபோ சோபியா



குழந்தை பெற்றுக் கொள்ள விரும்பு கிறேன் அக் குழந்தைக்குச் சோபியா என்று எனது பெயரையே பெயர் வைப் பேன் என்று சவுதி அரேபியாவில் பெண் ரோபோ கூறியது ஆச்சரியத்தை ஏற் படுத்தியுள்ளது.

ஹொங்கொங்கின்ஹன்சன்ரோபோடிக்ஸ் நிறுவனம் ஒரு பெண் ரோபோவை வடி வமைத்துத் தயாரித்துள்ளது. 'சோபியா' என பெயரிடப்பட்டுள்ள இந்த ரோபோ விற்கு சவுதி அரேபிய அரசு குடியுரிமை வழங்கியது. இதன் மூலம் உலகிலேயே முதன்முதலில் குடியுரிமை பெற்ற 'ரோபோ' என்ற பெருமையைப் இது பெற்றுள்ளது.

குடியுரிமை பெற்று ஒரு மாதம் ஆகி யுள்ள நிலையில் 'சோபியா ரோபோ' சவுதி அரேபிய பத்திரிகைக்கு பேட்டி அளித்துள்ளது. அதில் குடும்பம் தொடர் பான கேள்விக்கு அழகாகப் பதில் கூறி யுள்ளது.

அதில், குடும்பம் என்பது மிக முக்கிய மான விடயம். சொந்த ரத்த வகையைத் தாண்டியும், தங்களுக்கு ஒத்த உணர்வுக ளைக் கொண்ட சொந்தங்களைக் குடும்பம் என அழைப்பது மிகவும் அற்புதமான ஒன்று.

உங்களுக்குப் பாசமான குடும்பம் இருந்தால் நீங்கள் மிகவும் அதிர்ஷ்ட சாலி. அவ்வாறு இல்லையென்றால் அத்த கைய குடும்பத்தைப் பெறும் உரிமை உங்களுக்கு உண்டு. இதில் மனிதர்களும், ரோபோக்களும் ஒரே மாதிரியானவர்கள் எனக் கருதுகிறேன்.

குழந்தை ஒன்றைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறேன். எனது குழந்தைக்கு 'சோபியா' என்றே பெயர் வைப்பேன் எனத் தெரிவித்துள்ளது.




# ரெய்னாவை டோனி சாடியது ஏன்?

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் டோனி தன் சகவீரரான ரெய்னாவை மறைமுகமாகச் சாடியதற்கு காரணம் வெளியாகியுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் சிறந்த சிறந்த வீரராக அறியப்பட்டவர் சுரேஷ் ரெய்னா. சமீப காலமாக வாய்ப்பளிக்கப்படாமல் இருந்த அவர் நிகழ்ச்சி ஒன்றில் டோனி தொடர்பாகப் பேசியமை சர்ச்சையை கிளப்பியிருந்தது.

அதில், டோனிக்கு கோபம் வராது என்பதெல்லாம் பொய். அவரை கேமரா எப்போது பார்க்கும், பார்க்காது என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். தன் பார்வையில் எந்தவித உணர்ச்சியையும் காட்டிக் கொள்ள மாட்டார். சில சமயங்களில் கொஞ்சமாவது உணர்ச்சிகளைக் காட்டுங்கள் எனக் கேட்கும் எண்ணம் கூட தோன்றியுள்ளது எனப் பேசியிருந்தார்.

இவ்வாறு பேசியிருந்த நிலையில் அதற்கு மறைமுகமாகப் பதிலளித்திருந்தார் டோனி. அதில், களத்தில் இறங்கி விட்டால் நான் கடினமாக இருப்பேன், நகைச்சுவையுடன் பேசமாட்டேன்.

மகிழ்ச்சியாக இருக்கப் பல்வேறு இடங்கள் இருக்கின்றன. வீரர்கள் அறையில் மட்டும்தான் கலகலப்பாக இருப்போம், இதுவே உண்மை என கூறியிருந்தார்.

எப்போதும் தன்மீது வைக்கப்படும் விமர்சனங்களுக்கு மௌனத்தை மட்டுமே பதிலாகத் தரும் டோனி இம்முறை பேசியமைக்குச் சில காரணங்கள் இருக்கின்றன எனக் கூறப்படுகிறது.

டோனி அணித்தலைவராக இருந்தபோது நடந்த இந்தியா-பாகிஸ்தான் இடையேயான போட்டியில் பாகிஸ்தான்வீரர் உமர் அக்மலைக் கிண்டல் செய்துள்ளார் ரெய்னா. இது தொடர்பாக அக்மல், டோனியிடம் முறையிட ரெய்னாவை கடுமையாக எச்சரித்துள்ளார் டோனி.

இதை மனதில் வைத்து ரெய்னா பேசியுள்ளார் எனவும், அதனால் தான்டோனி பதிலடி கொடுத்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

(ப)

# முடிந்தால் அடித்து பாருங்கள் - லயன்



ஆஸ்திரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளரான நதன் லயன், முடிந்தால் என் பந்து வீச்சை அடித்துப் பாருங்கள் என்று இங்கிலாந்து வீரர்களுக்கு சவால் விடுத்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் ஆஷஸ் தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டி அடிலெய்டில் வரும் 2 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த நிலையில் இப்போட்டி தொடர்பாக ஆஸ்திரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளர் லயன் கூறுகையில், இங்கிலாந்து அணியினர் என்னை அடித்து ஆடினால் நிச்சயம் என் வலையில் விழுவர். என் பந்து வீச்சை அடித்துத் துவைத்து என்னைப் பந்துவீச்சிலிருந்தே தூக்குமாறு செய்தால் எனக்கு அது பிடிக்கவே செய்யும். நிச்சயம் கடந்த டெஸ்ட் போட்டியை விட வரும் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணியினர் எனக்கு எதிராக சிறந்த உத்தியுடன் இறங்குவார்கள்.

ஆனால் இப்படிப்பட்ட சவால்கள் தான் கிரிக்கெட் ஆட்டத்தின் வேடிக்கையே, வலது கை, இடது கை வீரர்களுக்கும் உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களுக்கும் வீசும் சவால்களையே நான் எப்பவும் விரும்பி இருக்கிறேன்.

வீரர்கள் அடித்து ஆடும்போதுதான் எனக்கும் விக்கெட்டுகளை வீழ்த்துவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும். எனவே இது எதிர்பார்ப்புகளை அதிகரிக்கிறது. சவாலையும் எதிர்நோக்குகிறேன் என்று கூறியுள்ளார்.

# இங்கிலாந்தை சும்மா விடப்போவதில்லை

## ஸ்மித் சூளுரை



இந்த ஆஷஸ் 2 வது தொடரிலும் இங்கிலாந்து அணியைச் சும்மா விடப்போவதில்லை என்று ஆஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்மித் கூறியுள்ளார்.

5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரின் முதல் போட்டி பிரிஸ்பேனில் நடைபெற்றது. இப்போட்டியில் ஆஸ்திரேலியா அணி, இங்கிலாந்து அணியுடன் இலகு வெற்றி பெற்றது.

இந்த நிலையில் வெற்றிக்கு பின் ஆஸ்திரேலியா அணியின் தலைவர் ஸ்மித் கூறுகையில், அடுத்து நடக்கவிருக்கும் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி சில பந்து வீச்சாளர்களை ஆட்டத்துக்குள் வரவைக்கும்.

அதுமட்டுமன்றி, அடிலெய்டிலும் இங்கிலாந்திற்கு அடி காத்திருக்கிறது, அது ஏன் இந்த ஆஷஸ் தொடர் முழுதும் ஆஸ்திரேலியா அணியின் தீவிரம் குறையாது. இங்கிலாந்து அணியை சும்மா விடப்போவதில்லை எனக் கூறியுள்ளார்.

# சர்வதேச வீரராக நிலைக்க டெஸ்டில் ஆடவேண்டும்

சர்வதேச அளவில் சிறந்த வீரராக உருவாக விரும்பினால் டெஸ்ட் போட்டிகளில் நன்றாக விளையாட வேண்டும் என்று விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

டில்லியைச் சேர்ந்த முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் கூட்டம் பெரோசா கோட்லா மைதானத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

பெரோசா கோட்லா மைதானத்தில் உள்ள இரண்டு இடங்களுக்கு முன்னாள் வீரர்கள் பிஷன்சிங் பெடி, மொகீந்தர் அமர்நாத் பெயர்கள் சூட்டப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் இந்திய அணித் தலைவரும், டில்லியைச் சேர்ந்தவருமான விராட் கோஹ்லி பாராட்டப்பட்டார். அவர் சமீபத்தில் இலங்கை அணிக்கு எதிரான 2 டெஸ்டிலும் தொடர்ச்சியாகச் சதம் அடித்தார். இதன்மூலம் சர்வதேசப் போட்டிகளில் அவர் 51 சதங்களைத் தொட்டார். இதை யொட்டி அவரைக் கௌரவித்து நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. அப்போது பேசிய அவர்,

சர்வதேச அளவில் சிறந்த வீரராக உருவாக விரும்பினால் டெஸ்டில் நன்றாக விளையாட வேண்டும் என்று நான் நம்புகிறேன். எனவே இளம் வீரர்கள் டெஸ்டில் சிறப்பாக விளையாட வேண்டும். இதனால் அவர்கள் அதில் மேலும் கவனம் செலுத்த வேண்டும்.

நான் 14 மற்றும் 16 வயதுக்குட்பட்ட டில்லி அணியில் ஆடியபோது பிஷன் சிங் பெடி பயிற்சியாளராக இருந்தார். எங்களை அதிகமான நேரம் பயிற்சி பெற வைத்தார். தற்போது அது என் வாழ்க்கையில் ஒரு பகுதியாவே மாறிவிட்டது என்று தெரிவித்துள்ளார்.



# இந்தியாவுடனான போட்டி நல்ல வீரர்களை இனங்காட்டும்

## நிக் போத்தாஸ்



இந்தியாவுக்கு எதிராக நாக்பூரில் ஓர் இன்னிங்ஸ் மற்றும் 239 ஓட்டங்களால் அடைந்த தோல்வி இலங்கையின் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் பதிவான மிகவும் மோசமான– மிகப் பெரிய – தோல்வியாகும். இந்தியாவிடம் இலங்கை தொடர்ச்சியாக அடைந்து வரும் தோல்விகளின் பட்டியல் நீண்டுகொண்டே போகின்றது.

இந்திய அணியினரிடம் கடந்த ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் இலங்கை அணி 0:3 என்ற ஆட்டக் கணக்கில் முழுமையான தோல்வி அடைந்தது. 304 ஓட்டங்களால், ஓர் இன்னிங்ஸ் மற்றும் 33 ஓட்டங்களால், ஓர் இன்னிங்ஸ் மற்றும் 171 ஓட்டங்களால் என முறையே மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் இலங்கை தோல்வி அடைந்திருந்தது. டெஸ்ட் போட்டி முடிவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் நிக் போத்தாஸ் கூறியவை வருமாறு:-

வீரர்கள் தொடர்ச்சியாக விளையாடுவதன் மூலம் புதிய அனுபவங்களைப் பெறுகின்றனர். அத்துடன் சரியான கிரிக்கெட் பண்பியல்புகளைக் கொண்ட வீரர்களை இனங்காண உதவும் என இலங்கை கிரிக்கெட் அணியின் இடைக்காலப் பயிற்றுநர் நிக் போத்தாஸ் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான அனுபவங்களைப் பெறும் வீரர்களால் நீண்ட காலத்துக்கு அணியை நகர்த்திச் செல்லக்கூடியதாக இருக்கும். சில வீரர்கள் தொடர்ந்து அதே தவறை இழைத்து வருகின்றனர். அவர்கள் அணியிலிருந்து விலக்கப்படுவதற்கான ஆபத்தை எதிர்கொண்டுள்ளனர்.

கடைசியாக நடந்து முடிந்த தொடரிலும் இங்கு வருகை தந்த இந்த குறுகிய காலத்திலும் நான் நிறைய விடயங்களைக் கற்றுக் கொண்டேன். தொடர்ந்து கற்றுக் கொள்ளவும் ஆசைப்படுகின்றேன். இந்தியா போன்ற அணியுடன் விளையாடுவதானது கிரிக்கெட் விளையாட்டு செஸ் விளையாட்டுக்கு ஒப்பானது. ஓர் அணி அல்லது தனிப்பட்ட வீரர் நகர்த்தலில் ஈடுபடும்போது அதனை முறியடிப்பதற்கான மாற்று நகர்த்தல் இருக்க வேண்டும். அல்லது ஓடும் பஸ்ஸிலிருந்து விழுவது போலாகிவிடும்.

எமது அணியில் சிலர் ஒரே நகர்வை மீண்டும் மீண்டும் ஏற்படுத்துகிறார்கள். அதன் மூலம் செஸ் விளையாட்டில் போன்று காய்களை இழந்து விடுகின்றனர் என்றார். அதாவது மீண்டும் மீண்டும் அதே தவறை இழைப்பதால் அணியில் தங்களது இருப்பை அவர்கள் இழக்க நேரிடும். அதே வேளை இலங்கைக் கிரிக்கெட்டின் தற்போதைய வீழ்ச்சிக்கு உள்ளூரில் விளையாடப்படும் மூன்று நாள் முதல்தரக் கிரிக்கெட் போட்டிகளே காரணம் என போத்தாஸ் தெரிவித்தார்.



# பி.சி.சி.ஐயின் முறைகேடு; 52 கோடி ரூபா அபராதம்

ஐ.பி.எல் போட்டிகள் ஒளிபரப்பு உரிமம் ஒதுக்கீட்டில் எதேச்சதிகாரமாகச் செயற்பட்டது எனக் கூறிச் சந்தை வர்த்தகப் போட்டி ஆணையம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு 52.24 கோடி ரூபா அபராதம் விதித்துள்ளது.


இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையால் (பி.சி.சி.ஐ) நடத்தப்படும் ஐ.பி.எல் போட்டிகளை ஒளிபரப்பும் உரிமம், அனுசரணை ஒப்பந்தம் ஆகியவற்றுக்கான விதிமுறைகளில் பி.சி.சி.ஐ எதேச்சதிகாரமாக செயல்பட்டுள்ளது என சந்தை வர்த்தக போட்டி ஆணையம் கூறியுள்ளது.

கடந்த பத்து ஆண்டுகளாக ஐ.பி.எல் போட்டிகளில் பி.சி.சி.ஐ தனது விருப்பத்திற்கேற்ப விதிமுறைகளை மாற்றிக் கொண்டுள்ளது. பி.சி.சி.ஐ லாபம் ஈட்டும் நிறுவனம் இல்லை, அதன் வருமானங்கள் அனைத்தும் கிரிகெட்டின் வளர்ச்சிக்காகவே இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2013 முதல் 2016 வரை நடந்த போட்டிகளின் மூலம் சராசரியாக ஆண்டுக்கு ஆயிரத்து 164 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது. இதில், 4.8 விகிதம் அதாவது 52.24 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்படுகின்றது எனக் கூறப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தில் அசுர பலத்துடன் உள்ள இந்தியக் கிரிக்கெட் ங்பையின் ஆதிக்கத்தின் காரணமாக, வேறு எந்தத் தகுதியான போட்டியாளர்களும் இந்தப் போட்டிகள் மற்றும் அதன் வர்த்தகத்தில் ஈடுபட அனுமதிக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இதேபோல 52.24 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆனால், இதை எதிர்த்து நீதிமன்றத்தில் முறையிட உள்ளோம் எனக் கிரிக்கெட் சங்க நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.




# ரஷ்யா 2018 உலகக் கிண்ண உதைபந்தாட்ட சுவரொட்டி

ரஷ்யாவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள சர்வதேச உதைபந்தாட்டச் சங்கங்களின் சபை (பீபா) உலகக் கிண்ணப் போட்டிகளை முன்னிட்டு உத்தியோகபூர்வ சுவரொட்டி வெளியிடப்பட்டுள்ளது.

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளுக்கான குலுக்கல் ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் நடைபெறவுள்ள நிலையில் அதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் இந்த அழகிய சுவரொட்டி அறிமுகம் செய்துவைக்கப்பட்டது.

ரஷ்ய ஓவியர் இகோர் குரோவிச்சால் வடிவமைக்கப்பட்ட இந்தச் சுவரொட்டியின் மத்தியில் ரஷ்யாவின் முன்னாள் கோல்காப்பாளர் லெவ் யாஷினின் உருவம் பதிக்கப்பட்டுள்ளது. இவர் பெலன் டி ஓர் விருதை வென்றவராவார்.

சர்வதேச உதைபந்தாட்ட அரங்கில் பெலன் டி ஓர் விருதை வென்றுள்ள ஒரே ஒரு கோல்காப்பாளர் லெவ் யாஷின் ஆவார். ரஷ்ய கலைத்துவத்தையும் உதைபந்தாட்டப் பாரம்பரியத்தையும் இந்தச் சுவரொட்டி விளக்கி நிற்கின்றது.



# ஆஸி. வீரர்களுக்கு தடை ஏதும் இல்லை

ஒழுங்கீன சர்ச்சையைத் தவிர்க்க இரவில் வெளியில் செல்ல ஆஸ்திரேலிய வீரர்களுக்குத் தடை விதிக்கப்படுமா? என்ற கேள்விக்கு டேரன் லீமான் பதிலளித்துள்ளார்.

ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் டேரன் லீமான் அளித்த ஒரு பேட்டியில், எங்களது சுழற்பந்து வீச்சாளர் நாதன் லயன் (70 டெஸ்டில் 274 விக்கெட்) அற்புதமாக செயற்பட்டு வருகிறார்.

அவருக்கு இப்போது 30 வயது ஆகிறது. இதே போன்று தொடர்ந்து தன்னம்பிக்கையுடன் செயற்படும் பட்சத்தில் 700 விக்கெட்டுகளை அவரால் வீழ்த்த முடியும் என்று நம்புகிறேன் – என்றார்.

ஒழுங்கீனச் சர்ச்சையைத் தவிர்க்க இங்கிலாந்து வீரர்கள் இரவு நேரத்தில் விடுதியை விட்டு வெளியே செல்வதற்கு அந்த அணி நிர்வாகம் தடை விதித்துள்ளது. அதே போன்று ஆஸ்திரேலிய வீரர்களுக்கும் அது போன்று தடை விதிக்கமாட்டோம். எங்களது வீரர்கள் சரியான வழியில் செல்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அது மட்டுமன்றி அவர்கள் ஒன்றும் சிறுவர்கள் அல்லர். நல்ல அனுபவசாலிகள் என்று தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



## பெப்ரவரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல்கள் ஆணையாளர்களில் ஒருவரான பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் காலைக்கதிருக்கு இதனைத் தெரிவித்தார்.

ஏற்கனவே வேட்புமனுக் கோரப்பட்டுள்ள 93 உள்ளூராட்சிச் சபைகள் தவிர்ந்த உள்ளூராட்சிச்சபைகளுக்கான வேட்புமனுக்கோரும் அறிவிப்பு எதிர்வரும் 4ஆம் திகதி விடுக்கப்படும். இதன்படி எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி நண்பகல் வரை இவற்றுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் அவர் கூறினார்.

உள்ளூராட்சி எல்லை நிர்ணயம் தொடர்பான வர்த்தமானிக்கு எதிராகக் கொழும்பு மேன்முறையீட்டுநீதிமன்றத்தில் 6 பேரால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நேற்று மீளப்பெறப்பட்டன. இதனையடுத்து அந்த வர்த்தமானியை நடைமுறைப் படுத்துவதற்கு பிறப்பித்திருந்த இடைக்காலத் தடையை நேற்று விலக்கிக்கொண்டது கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம். ஆயினும் அது தொடர்பான கடிதத்தில் நேற்று நீதியரசர்கள் கையெழுத்திடவில்லை. இன்று முதல் எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விடுமுறை நாள்கள் என்பதால் நீதியரசர்களிடம் கையெழுத்துப் பெற முடியாது. எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமையே அது சாத்தியமாகும். இதனால் என்ன செய்வதென்று தெரியாது சிக்கலை எதிகொண்டது தேர்தல் ஆணைக்குழு.

ஆயினும் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் பைசர்முஸ்தபாஇந்தவிடயத்தில் உடனடியாகத் தலையிட்டார். வர்த்தமானிக்கு எதிராக விதிக்கப்பட்டதடைநீக்கப்பட்டுவிட்டது. அதுதான் நீதிமன்றத் தீர்ப்பு என்றும், அதற்கு மேலதிகமாக ஏதாவதுசிக்கல்ஏற்படின்தானே அதற்குப் பொறுப்பு என்றும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அமைச்சர் நேற்றுக் கடிதம் அனுப்பினார். அவரது கடிதம் தீர்ப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதனை அடுத்து சகல உள்ளூராட்சிச் சபைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை தேர்தல்கள் செயலகம் நேற்று உடனடியாகவே ஆரம்பித்துள்ளது.

நீதிமன்ற வழக்குகளுடன் தொடர்புபடாத 93 உள்ளூராட்சிச் சபைகளுக்கான வேட்பு மனுக்களை டிசெம்பர் 11 ஆம் திகதியில் இருந்து டிசெம்பர் 14 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளுமாறுமாவட்டத்தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குத்தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த 27 ஆம் திகதிஅறிவித்திருந்தது.ஏனைய உள்ளூராட் சிச் சபைகளுக்கான வேட்புமனுக்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி நண்பகல் வரை ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

சகல சபைகளுக்குமான தேர்தல் அறிவிப்பு டிசெம்பர் 26 ஆம் திகதி வெளியிடப்படும். தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின் பேரில் மாவட்டத்தெரிவத்தாட்சி அலுவலர்கள் இந்த அறிவிப்பை விடுப்பர்.

இதன்படி எதிர்வரும் ஜனவரி 30 ஆம் திகதிக்கும் பெப்ரவரி 13 ஆம் திகதிக்கும் இடையில் தேர்தலை நடத்தவேண்டி ஏற்படும். ஆயினும் பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினம் என்பதால் பெப்ரவரி முதல் வாரத்தில் தேர்தலை நடத்துவது சாத்தியமில்லை. ஆகையால் பெப்ரவரி 10 ஆம் திகதி தேர்தலை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று தேர்தல் ஆணையாளர்களில் ஒருவரான பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் குறிப்பிட்டார்.

## நீங்கியது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு மேன் முறையீட்டுநீதிமன்றம்.

இதனால் சகல உள்ளூராட்சிச்சபைகளுக்கும்சமகாலத்தில் தேர்தல் அறிவிப்பை வெளியிடுவதற்கு அரசுக்கு இருந்து வந்த முட்டுக்கட்டையும் நீங்கியது.

உள்ளூராட்சிச் சபைகளின் எல்லை நிர்ணயம் தொடர்பான வர்த்தமானிக்கு எதிராக மேன்முறையீட்டுநீதிமன்றில்தாங்கள் தாக்கல் செய்த மனுக்களை 6 மனுதாரர்களும் நேற்று மீளப்பெற்றனர். இதனையடுத்தே அனைத்துச் சபைகளுக்கும் தடையின்றித் தேர்தலை நடத்த வழி ஏற்பட்டுள்ளது.

எல்லை நிர்ணய வர்த்தமானிக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்த ஆறு மனுதாரர் களுடனும் தாம் நடத்திய பேச்சுக்களை அடுத்து, அந்த மனுக்களை மீளப் பெற அவர்கள் இணங்கியுள்ளனர் என அமைச்சர் பைசர் முஸ்தபா நேற்றுக் காலை நாடாளுமன்றத்தில் அறிவித்தார். இதனால் திட்டமிட்டபடி தேர்தல் நடத்தும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இந்நிலையில் இந்த மனு, நீதியரசர்களான எல்.டி.பி. தெஹிதெனிய, (மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர்) குமுதினி விக்ரமசிங்ஹ, சிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய குழாம் முன்னிலையில், நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்போது, தேர்தல்கள் திணைக்களத்தால் 93 உள்ளூராட்சி மன்றக்களுக்கான வேட்புமனுக்கள் கோரப்பட்டுள்ளதாலும் தேசிய நலனைக் கருத்திற் கொண்டும் தமது மனுவை திரும்பப் பெறுவதாக மனுதாரர்கள்சார்பில்ஆஜராகிய சட்டத்தரணி என்.எம்.கீட் நீதிமன்றத்தில் அறிவித்தார்.

மனுக்கள் மீளப்பெறப்படுவதால், அதிவிசேட வர்த்தமானிக்கு விடுக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடை உத்தரவை நீக்குமாறும், வழக்குச்செலவை அறிவிக்கவேண்டாம் என்றும் சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய நீதியரசர்கள் குழாமிடம் கோரினார். இதனை அடுத்தே வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக விதிக்கப்பட்ட தற்காலிகத் தடை நீக்கப்பட்டுள்ளது என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்தது.

அமைச்சர் நாடாளுமன்றில் தகவல் வெளியிட்டுச் சிறிது நேரத்தில் மனுக்கள் மீளப்பெறப்பட்டன.

உள்ளூராட்சிமன்றங்களின் எல்லை நிர்ணயம் தொடர்பில் அண்மையில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை செல்லுபடியற்றதாகஅறிவிக்கக் கோரி கடந்த 15ஆம் திகதி மேன்முறையீட்டுநீதிமன்றத்தில் 6 பொது மக்களால் தனித் தனியே மனுக்கள்தாக்கல்செய்யப்பட்டன.

இதனையடுத்து உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை நிர்ணயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிர்வரும் 4ஆம் திகதி வரை தற்காலிகத் தடை விதித்து, மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறத்திருந்தது.

இந்த மனுக்களின்பிரதிவாதிகளாக மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா, அமைச்சின் செயலாளர்எச்.ரி.கமல்பத்மசிறி ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

ஐக்கியதேசியக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, பொது ஜன பெரமுன, பவ்ரல், கபே உள்ளிட்டதரப்பினர்மனுவுக்குத் தமது ஆட்சேபனையைத் தெரிவித்திருந்ததுடன். இடையீட்டு மனுக்களையும்தாக்கல்செய்திருந்தனர்.

இதேவேளை, இந்த மனுக்களை நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளக் கோரிச் சட்டமாஅதிபர்சார்பில்நகர்த்தல் மனுதாக்கல் செய்யப்பட்ட போதும், மேன்முறையீட்டு நீதிமன்றம் அதனை நிராகரித்திருந்தது. அவை டிசெம்பர் 4ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கடும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திய நிலையத்தின் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்,

இலங்கையின் தென் மேற்குப் பகுதியில் நிலைகொண்டுள்ள தாழமுக்கம் காரணமாக நேற்று முன் தினம் மாலை முதல் கடும் காற்றுடன் மழை பெய்து வருகின்றது. இதனால், தென்னிலங்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மரங்கள், மின் கம்பங்கள், விளம்பரப் பதாகைகள் முறிந்து வீழ்ந்துள்ளன. மரம் முறிந்து வீழ்ந்ததில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், தென் பகுதியிலிருந்து கடலுக்குச் சென்ற நால்வரின் சடலங்கள் நேற்றுக் காலை தெற்குக் கடற்பரப்பின் வெவ்வேறு இடங்களில் கரையொதுங்கியுள்ளன.

இந்தச் சீரற்ற வானிலை காரணமாக மேலும் 5 பேர் காணாமற்போயுள்ளனர். 20 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பல குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன –என்றார்.

தென்மேற்குக் கடற்பரப்பில் ஏற்பட்ட தாழமுக்கம் தற்போது வலுவடைந்து கொழும்பிலிருந்து அரபுக் கடலை நோக்கி 350கி.மீதொலைவில்தற்போது காணப்படுவதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

கொழும்பு மற்றும் அதனை அண்மித்தபகுதிகளில்மணிக்கு 100 கி.மீ., வேகத்தில் கடும் காற்று வீசக்கூடும் என ஆய்வு மையத்தின்தலைவர்எஸ்.பிரேமலால் தெரிவித்தார்.

காலியில் பலத்த மழையால் பொதுமக்களுக்குக் கடும் சேதமும் ஏற்பட்டுள்ளது. நாட்டின் ஏனைய மாவட்டங்களை விட காலியில் கடுமையான மழை தொடர்ந்து பெய்து வருகின்றது. இதனால் பாதைகளில் நீர் நிரம்பிப் போக்குவரத்தும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. காலி நகருக்குள் கடும் மழை மற்றும் வேகமான காற்று காரணமாக சுமார் 23 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன. மேலும் 600க்கும் மேற்பட்ட வீடுகள் ஓரளவு சேதத்தை எதிர்கொண்டுள்ளன. இதனால் 700க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டும் ஒரு சிலர் வேறிடங்களுக்கு இடமாற்றப்பட்டும் உள்ளனர் எனக் காலி மாவட்ட செயலாளர் பணிமனை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நயினாதீவிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்கடல்கொந்தளிப்பாகக் காணப்பட்டது.

வழமையைவிடகடல்அலை வீதி வரை வருவதாகவும், இதனால் குறித்த பகுதியில் போக்குவரத்துப்பாதிக்கப்பட்டதுடன், மக்கள் பீதியடைந்தனர் என்றும் கூறப்பட்டது.

நாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலையால் பல பாகங்களிலும் பலத்த காற்று வீசுவதுடன்கரையோரப்பிரதேசங்களில் கடல் கொந்தளிப்பும் காணப்படுகின்றது.

## கத்திகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாள்கள், 2 கைக்கோடரி, ஒரு நாட்டுக்குண்டுஎன்பனகைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் மறைந்திருந்த மூவர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே நேற்று முன் தினம் இரவு மேலும் மூவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

கோண்டாவில், கொக்குவில் மற்றும் நல்லூர்ப் பகுதிகளைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் 6 பேரும் விசாரணையில் உள்ளனர். அவர்களால் வழங்கப்படும் தகவலின் அடிப்படையில் ஆவா குழுவைச் சேர்ந்த முக்கியநபர்கள் கைது செய்ய வேண்டியுள்ளது.கைதுசெய்யப்பட்ட 6 பேரிடமும் 6 வாள்கள், 2 கைக்கோடரி என்பன கைப்பற்றப்பட்டனஎன்றுபொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கொழும்பில் கைதான ஆவா குழுவின் இக்ரம் உள்ளிட்ட மூவரையும் வரும் டிசெம்பர் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவித்துப் பொலிஸாரால்தேடப்பட்டுவந்தவர்களான முஸ்லிம் இளைஞரான இக்ரம் உள்ளிட்ட மூவர் கொழும்பு புறநகர்ப் பகுதியில் வைத்துக் கடந்தசெவ்வாய்க்கிழமைகைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத் தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிதலைமையிலானபொலிஸ் குழுவே சந்தேகநபர்கள் மூவரையும் கொழும்பில் கைது செய்து யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்தது.

சந்தேகநபர்கள் மூவரும் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டனர். விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள் மூவரையும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (ஐ-7)

## பாதிக்கப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடர்முகாமைத்துவ அமைச்சருடன் நேற்றுத் தொலைபேசியில் உரையாடிய ஜனாதிபதி இந்த உத்தரவை விடுத்தார்.

காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குமாறும், இடரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத்தலா 10 ஆயிரம் ரூபா ஆரம்ப உதவியாக வழங்கவும் ஜனாதிபதி அமைச்சருக்கு உத்தரவிட்டுள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்றுத் தெரிவித்தது. (ஐ)

## ஹெரோயினுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டனர் என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருநகர் பகுதியைச் சேர்ந்த 27, 33 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இரண்டு ஹெரோயின் பக்கற்றுக்கள் கைப் பற்றப்பட்டன. 690 மில்லி கிராம் எடையுள்ள அவற்றின் பெறுமதி 10 இலட்சம் ரூபா ஆகும்.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் கூறினர். (ஐ)

## வலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலிகாமம் வடக்கு வல்லை – தெல்லிப்பழை–அராலிவீதியில் வசாவிளானுக்கும், அச்சுவேலிக்கும் இடைப்பட்ட பகுதியான வசாவிளான் உத்தரிய மாதா ஆலயம் மற்றும் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, ஜே/245 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட நிலப் பகுதிகள் என்பனவே இவ்வாறு விடு விக்கப்பட்டன.

யாழ். மறைமாவட்ட ஆயர் மேற்கொண்ட தொடர் முயற்சியின் பலனாகக் கடந்த 30 ஆண்டுகளின் பின்னர் இந்தப் பகுதியை விடுக்க இராணுவத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் விடுவிக்கப்பட்ட காணிகளை நேற்று யாழ்.மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி யாழ். மாவட்டச்செயலர்என்.வேதநாயகனிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

இதனை அடுத்து விடுவிக்கப்பட்ட பகுதியில் உள்ள பாடசாலை மற்றும் ஆலயம் மற்றும் காணிகள், வீடுகளை மக்கள் ஆவலுடன் சென்று பார்வையிட்டனர்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலர், யாழ்.மாவட்டப் படைகளின் தளபதி, இராணுவ அதிகாரிகள், அரச அதிகாரிகள், அருட்தந்தையர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-7)

## சம்பந்தனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைமையகம் நேற்று நண்பகல் இதனை அறிவித்தது.

இதனையடுத்து வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தொழிற்சங்கம் கடந்த திங்கள் கிழமை தொடக்கம் முன்னெடுக்கப்பட்ட பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முடிவுக்கு வந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், போக்குவரத்துச் சபையின் தலைவருடன் நேற்றுக் காலை நடத்திய பேச்சுக்களை அடுத்தே இந்த வாக்குறுதி வழங்கப்பட்டதாகப் வடபிராந்திய போக்குவரத்துச்சபையின்தொழிற்சங்கம் தெரிவித்தது.


வட பிராந்திய முகாமையாளரையும், வடபிராந்திய பாதுகாப்பு அதிகாரியையும் இடமாற்றக்கோரி இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடமாகாண ஊழியர்கள்நடத்தியபணிப்புறக்கணிப்பு மூன்றாவது நாளாக நேற்று வியாழக்கிழமையும் தொடர்ந்தது. இதனால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

இந்நிலையில் வடக்கு இ.போ.ச. ஊழியர்களின் கோரிக்கை தொடர்பில் எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் இலங்கைப் போக்குவரத்துச் சபையின்தலைவருடன்நேற்று அவசர பேச்சு நடத்தினார் எனவும், இதன் மூலம் வடபிராந்திய முகாமையாளர் இடமாற்றம் செய்யப்படுவார் எனப் போக்குவரத்துச்சபையின்தலைவரால் உறுதிமொழி வழங்கப்பட்டதாகவும், இதனை அடுத்தே தாம் போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர் என்றும் வடக்கு இ.போ.ச. ஊழியர்களின்தொழிற்சங்கத்தினர் தெரிவித்தனர்.

போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்துள்ளதால் இன்று முதல் வடக்கு இ.போ.ச. பஸ் சேவைகள் அனைத்தும் வழமைக்குத் திரும்பும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கொழும்பில் மினி சூறாவளி

## பல வீடுகள் சேதம்









கொழும்பு, டிசெ. 01

இலங்கையில் நிலவிய சீரற்ற காலநிலை நேற்று முன்தினம் இரவு புயலாக மாறி பல பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பின் பல்வேறு பகுதியில் நேற்று முன்தினம் இரவு வீசிய சூறாவளி கார ணமாக பல இடங்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன், இயல்பு வாழ்க்கை முற்றாகத் தடைப்பட்டி ருக்கிறது.

நேற்று முன்தினம் இரவு எட்டு மணி முதல் பெய்த அடைமழையுடன் வீசிய பலத்த காற்றின் காரணமாக பல மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன், வீதி போக்குவரத்துத் தடைப்பட் டது.

வெள்ளவத்தை, தெஹிவளை, பம்பலப் பிட்டிய ஆகிய பகுதிகளில் பல வீடுகள் சேதம் அடைந்துள்ளன.

இந்த அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட 17 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். அத்துடன், சிலரைக் காண வில்லைஎனமுறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பின் பல பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு தடைப்பட் டிருந்த மின்சாரம் தற்போது வழமை நிலைக்கு வந் துள்ளது. எனினும் ,பிரதான வீதிகளில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளமையால் வீதி போக்கு வரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

பல பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீரற்ற காலநிலையால் பாதிப்பு ஏற்பட்டால் 1902 என்ற இலக்கத்துக்கு அறிவியுங்கள்

## அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 01

தற்போது நிலவும் சீரற்ற கால நிலையால் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் அது தொடர்பாக உள் நாட்டு அலுவல்கள் அமைச் சின்திடீர் அனர்த்த தொலைபேசி இலக்கத்திற்கு உடனடியாக தகவல் தருமாறு உள்நாட்டு அலு வல்கள் அமைச்சர் வஜிர அபே வர்தன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இதற்கான தொலைபேசி இலக் கம் 1902 ஆகும்.

தமக்கு பாதிப்பு ஏதும் ஏற்பட்டு இருக்குமாயின் கிராம உத்தி யோகத்தர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

நிவாரண சேவைகள் உடன



டியாக வழங்கப்படும். இழப் பீடும் உடனடியாக வழங்கவும் அமைச்சு நடவடிக்கை மேற் கொண்டுள்ளது.

நாடு முழுவதிலும் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பொதுமக்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றனர் எனவும் இவர் களுக்கு துரிதமாக நிவாரண சேவையை வழங்குமாறும் பாது காப்பு இடங்களில் தங்க வைக்கு மாறும் உள்நாட்டலுவல்கல் அமைச்சு சம்பந்தப்பட்ட அதி காரிகளுக்கு அறிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட வீடுகள் மற்றும் ஏனைய சொத்துக்கள் சேதங்கள் தொடர்பான தகவல்களை தமது பிரதேச கிராம உத்தியோகத்தர் களுக்கு வழங்கவேண்டும்.

இந்தத்தகவல்களுக்கு அமைய வாக துரிதமாக இழப்பீடு வழங் கப்படும் என்றும் உள்நாட்ட லுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன மேலும் தெரிவித் துள்ளார்.

(க)

# நியூஸிலாந்து செல்ல முற்பட்ட 3 இளைஞர் விளக்கமறியலில்

புத்தளம் மாவட்டத்தின் உடப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் சட்ட விரோதமாக கடல் மார்க்கமாக நியூஸிலாந் துக்குச்செல்ல படகு வரும் வரை காத்திருந்தனர் எனக் கூறப் படும் மூன்று இளைஞர்களும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 06 ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்கப்பட்டுள்ளனர்.

உடப்பு பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து நேற்று முன் தினம் அதிகாலை உடப்பு- செல்வபுரம் பகுதிக்கு பொலி ஸாரும் கடற்படையினரும் சென்றபோது மூன்று இளை ஞர்களும் கைது செய்யப்பட் டனர்.

புத்தளம் உடப்பு பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய மூன்று இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்க ளால் கொண்டு வரப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் மூன்றும்



கைப்பற்றப்பட்டன.

மேலும், அந்த இளைஞர்க ளுடன் அங்கு நின்ற ஐந்து இளை ஞர்களும், பொலிஸார் வருகின்ற மையைக் கண்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், நியூஸி லாந்து நாட்டுக்குத் தொழிலுக் காகச் செல்வதற்கு தாம் கடற் கரையில் படகு வரும் வரை காத்திருந்தோம் என்றும் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ள னர்.

இவர்கள் எதிர்பார்த்திருந்த படகு வரத் தாமதமானதன் கார ணமாகவே இவர்கள் பொலிஸா ரிடம் அகப்பட்டுக் கொண்டனர்.

கைது செய்யப்பட்ட இளை ஞர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டதுன் பின்னர் உடப்பு பொலிஸார் அவர்களை புத்தளம் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தியபோது அவர்கள் அடுத்த மாதம் 06 திகதி வரை விளக்கமறி யலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# நோயாளிகளைப் பார்க்க வருவதை பொதுமக்கள் இயன்றளவு தவிர்க்குக!

## யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், டிசெ.01

நோயாளிகளைப் பார்வை யிட வருகின்றமையைப் பொதுமக்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளி யிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள் ளவை வருமாறு:-

தற்போதைய பருவமழைக் காலத்தைத் தொடர்ந்து வைத் தியசாலையில் அதிக எண்ணிக் கையான நோயாளிகள் அனும திக்கப்பட்டு வருகின்றார்கள்.

குறிப்பாக டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப் படுகின்றது. மருத்துவ விடுதி களில் அளவுக்கதிகமான நோயா ளிகள் தினமும் அனுமதிக்கப்படு கின்றனர்.



மிகுந்த நெருக்கடியான நிலை யில் வைத்திய சேவையை வழங்க வேண்டியுள்ளது. எனவே, பொதுமக்கள் நோயாளிகளைப் பார்வையிட வருவதை இயன்ற வரை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர் கள். ஒரு நோயாளியைப் பார்வை யிடுவதற்கு இருவர் மாத்திரமே அனுமதிக்கப்படுவர்.

மகப்பேற்று விடுதிகளில் அனு மதிக்கப்பட்ட ஒருவருடன் ஒரு வர் மாத்திரமே நிற்பதற்கு அனு மதிக்கப்படுவர். குழந்தைகள் பிறக்கின்ற போது வைத்திய சாலைக்கு வருகைதந்து பார் வையிடுவதை இயன்றவரை தவிர்த்து வீடு சென்ற பின்னர் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பொதுமக்கள் நோயாளியைப் பார்க்கவரும்போது தாம் கொண்டுவரும் உணவு, உடை முதலான பொருள்களைக் கொடுத்துவிட்டு விரைவாக விடுதிகளை விட்டு வெளியேறி வைத்தியசேவையை வழங்க ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஒரு நோயாளியைப் பார்வை யிடுவதற்கு இருவர் மாத்திரமே அருகில் செல்ல முடியும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-7)

காலைக்கதிர் Kalaikkathir



# விமலுக்கு எதிராக 39 குற்றச்சாட்டுகள்

## லஞ்ச, ஊழல் ஆணைக்குழுவால் நேற்று மேல்நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல்



கொழும்பு, டிசெ.01

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவுக்கு எதிராக 39 குற்றச்சாட்டுகளை முன்வைத்து இலஞ்சம் அல்லது ஊழல் ஆணைக்குழுவால் கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்றுக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டரீதியான வருமானத்தைத் தாண்டி சுமார் 75 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்களைச் சேகரித்தமை உள்ளிட்ட 39 குற்றச்சாட்டுக்களை முன்வைத்தே விமல் வீரவன்ஸவுக்கு எதிராக இலஞ்ச அல்லது ஊழல் ஆணைக்குழுவால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் 2014ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவின் சட்டரீதியான வருமானத்தை தாண்டி 75 மில்லியன் ரூபாவுக்கும் அதிக வருமானங்களும் சொத்துக்களும் சேகரிக்கப்பட்டுள்ளன என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குற்றப்பத்திரத்தில் 32 சாட்சியாளர்கள் இணைக்கப்பட்டுள்ளதுடன் 93 சாட்சிப் பொருள்களும் பெயரிடப்பட்டுள்ளன. (ஐ)




# காலநிலை தொடர்பில் அச்சமடைய வேண்டாம்

## கூறுகின்றார் அமைச்சர்



கொழும்பு, டிசெ.01

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை குறித்து மக்கள் அநாவசியமாக அச்சமடையத் தேவையில்லை என இடர் முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்ன யாப்பா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தற்போதைய சூழ்நிலை தாழமுக்கத்தால் ஏற்பட்டுள்ளது. இது இன்னும் ஓரிரு தினங்களில் சரியாகிவிடும். எனினும், மக்களைக் குழப்பும் வகையில், சுனாமி ஏற்படலாம் புயல் வீசலாம் எனச் சிலர் வதந்திகளைப் பரப்பி வருகிறார்கள். அவை குறித்து மக்கள் அச்சமடையத் தேவையில்லை.

சுனாமி ஏற்படுவதற்கான அறிகுறி எதுவும் பதிவாகவில்லை. மேலும், தாழமுக்கம் புயலாக மாறும் வாய்ப்பும் இல்லை. காலநிலை மாற்றங்கள் குறித்து வானிலை அவதான நிலையம் தொடர்ச்சியாக அறிவிப்புகளை வெளியிடும்.

எனவே நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை குறித்து மக்கள் அநாவசியமாக அச்சமடையத் தேவையில்லை-என்றார். (ஐ)

# சிவசக்தி ஆனந்தன் எம்.பி. அவசர சிகிச்சைப் பிரிவில்



கொழும்பு, டிசெ.01

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் பொதுச் செயலருமான சிவசக்தி ஆனந்தன், வவுனியா மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் மாலை அவருக்கு ஏற்பட்ட மார்புவலியை அடுத்து, வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இதையடுத்து, அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு அவருக்குச் சிகிச்சைகள் அளிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# ஒரு கோடி 58 லட்சம் பேர் வாக்களிப்பதற்குத் தகுதி

கொழும்பு, டிசெ.01

2017ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலுக்கு அமைய இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிக்க ஒரு கோடி 57 லட்சத்து 60 ஆயிரத்து 867 பேர் தகுதி பெற்றுள்ளனர் எனத் தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டில் பதிவு செய்த வாக்காளர்களை விட இம்முறை ஒரு லட்சத்து 48 ஆயிரத்து 897 வாக்காளர்கள் அதிகரித்துள்ளனர் என மேலதிக தேர்தல் ஆணையாளர் எச்.எம்.மொஹமட் தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலுக்கு அமைய கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவான வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். கம்பஹா மாவட்டத்தில் 17 லட்சத்து 24 ஆயிரத்து 309 பேர் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இம்முறை கொழும்பு மாவட்டத்தில் 16 லட்சத்து 52 ஆயிரத்து 389 பேர் வாக்காளர்களாகப் பதிவு செய்துள்ளனர்.

# ஹபரணையில் கார் - பஸ் மோதி விபத்து; 2 பேர் சாவு

கொழும்பு, டிசெ.01

ஹபரணையில் காரொன்றும் பஸ் ஒன்றும் மோதியதில் இருவர் உயிரிழந்து 11 பேர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலையிலிருந்து தம்புள்ளைக்குச் சென்ற கார் ஒன்றும் கண்டியிலிருந்து திருகோணமலை சென்ற தனியார் பஸ் ஒன்றுமே நேருக்கு நேர் மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. காரின் சாரதியும் மற்றுமொருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். (ஐ)

# உருக்குலைந்திருந்த வசாவிளான்





வலிகாமம் வடக்கில் இராணுவத்திடமிருந்து விடுவிக்கப்பட்ட பாடசாலைகள், தேவாலயம் என்பன சேதமடைந்த நிலையிலேயே உள்ளன. பொதுமக்களின் வீடுகளும் தரை மட்டமாக்கப்பட்டுள்ளதுடன், காணிகளும் அடையாளம் காணமுடியாதவாறு பற்றைக் காடுகளாகக் காணப்பட்டன.

இவற்றைப் பார்த்த பாடசாலைச் சமூகத்தினர், மதகுருமார்கள், மற்றும் பொது மக்கள் பெரும் கவலையடைந்தனர்.

இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இருந்த வசாவிளானில் நேற்று 29 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்பட்டது. இதில் ஒரு பாடசாலை, தேவாலயம் உள்ளிட்ட பொது மக்களின் காணிகளும் உள்ளடங்குகின்றன.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட தேவாலயம் மேற்கூரைகள் எதுவுமற்ற நிலையில் சேதமடைந்து காணப்பட்டது. அதேபோன்றே பாடசாலையும் சேதமடைந்து உள்ளது. பொதுமக்களின் வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டுக் காணிகள் அடையாளம் காண முடியாதவாறு காடுகளாக உள்ளன என அங்கு சென்று திரும்பியவர்கள் கூறினர்.

இதேவேளை, அங்கு பல பகுதிகள் விடுவிக்கப்படாது இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும், அவற்றையும் விரைவில் விடுவிக்க வேண்டுமென்றும் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

தமது நிலங்கள் விடுவிக்கப்பட்டமை மகிழ்ச்சியளிப்பதாகவும், ஆனால் அவற்றைப் பார்க்க மிகக் கவலை ஏற்படுவதாகவும் அவர்கள் மேலும் குறிப்பிட்டனர். (ஐ-7)

# வடக்கில் பொலிஸாருக்கு விடுமுறை வழங்கப் பணிப்பு

கொழும்பு, டிசெ.01

மாவீரர் நாளை முன்னிட்டு வடக்கு மாகாணப் பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் சகல பொலிஸ் உத்தியோகத்தர்களின் விடுப்புகளும் இடைநிறுத்தப்பட்டிருந்தன. எனினும் நாளை (இன்று) முதலாம் திகதி தொடக்கம் பொலிஸாரின் விடுமுறைகளுக்கு அனுமதி வழங்குமாறு வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஷான் பெர்னான்டோ நேற்று அறிவுறுத்தியுள்ளார்.

இதற்கான அறிவுறுத்தல் கடிதம் வடக்கு மாகாணத்திலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் நேற்று அனுப்பிவைக்கப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் அதிகரிக்கும் வாள்வெட்டு வன்முறைகளைக் கட்டுப்படுத்தவே யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் பொலிஸாரின் விடுப்புகள் இடைநிறுத்தப்பட்டதாகச் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்க ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இந்நிலையில் மாவீரர் வாரத்தால் நிறுத்தப்பட்டிருந்த வடக்குப் பொலிஸாரின் விடுமுறைகளை இன்று முதல் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மீரியபெத்தையில் மீண்டும் மண் சரிவு அபாய நிலைமை

கொழும்பு, டிசெ.01

மீரியபெத்தையில் மீண்டும் பாரிய மண்சரிவு அபாயம் காரணமாக அந்தப் பிரதேச மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர்.

பதுளை மாவட்டத்தின் கொஸ்லாந்தைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள மீரியபெத்தையில் கடந்த 2014ஆம் ஆண்டு இடம்பெற்ற பாரிய மண்சரிவு காரணமாகச் சுமார் 400 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருந்தன. 40 க்கும் அதிக மாணவர்கள் உயிரிழந்தனர்.

இந்நிலையில் தற்போதைய அசாதாரண காலநிலை காரணமாக மீரியபெத்தை பிரதேசத்தில் மீண்டுமொரு மண்சரிவு அபாயம் தோன்றியுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால் அப்பிரதேசத்தில் வசித்த 158 குடும்பங்களைச் சேர்ந்த பொது மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.12.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.